# உதயன்

சுடர் : 36 | கதிர் : 224 | வியாழக்கிழமை | ஆனி 24 ஆம் நாள் 08 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பயனாளிகள் பட்டியல்

வீட்டுத்திட்டத்துக்காக பிரதேச செயலகங்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பயனாளிகளின் விவரங்களில் ஒரு தொகுதி நாளைய உதயனில் வெளியாகும்.

# தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்க தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்

### சம்பந்தனிடம் பிரிட்டன் தூதுவர் உறுதி

கொழும்பு, ஜூலை 8

புதிய அரசமைப்பு, அதிகாரப் பகிர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர், பயங்கரவாதத் தடைச் சட்டம், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறல் போன்ற தமிழர் விவகாரங்களில் இலங்கை அரசுக்குப் பிரிட்டனின் அழுத்தங்கள் தொடர்ந்து இருக்கும். 19 >



## யாழ். நகரில் வர்த்தகர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் மாநகரில் வர்த்தகர் ஒருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத் 19 >

## இலங்கை மீனவர் இந்திய கரையில் சடலமாக மீட்பு

சென்னை, ஜூலை 8

சில தினங்களுக்கு முன்னர் கடற்றொழிலுக்குச் சென்றிருந்த நிலையில் காணா 19 >

## அரசியல் தீர்வு பற்றி தமிழ் அரசுக் கட்சி ஆராய்வு

*மாகாண சபைத்தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்கவும் முடிவு*

கொழும்பு, ஜூலை 8

தமிழ் மக்களுக்கு அதியுச்ச அதிகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில், தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவினர் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர். இந்தச் சந்திப்பு, 19 >

## 5 மாதங்களான குழந்தை சாவு

கிளிநொச்சி, ஜூலை 8

பிறந்து ஐந்து மாதங்களான சிசு திடீர் சுகவீனம் ஏற்பட்டு நேற்று ன்தினம் உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம், கண்டாவளையின் தம்பிரபுரம் உழவனூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் 19 >

## கறுப்பு வரலாற்றுடனேயே ஜனாதிபதி கோத்தா ஆட்சி

*சபையில் அநுர சீற்றம்*



கொழும்பு, ஜூலை 8

"கறுப்பு வரலாற்றைக்கொண்ட தலைவரே எமது நாட்டில் பிரதான கதிரையில் அமர்ந்துள்ளார். ஒடுக்குமுறை வரலாறே அவருக்கு இருக்கின்றது. இன்று மக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளார். மக்களுக்கு தலைமைத்துவம் வழங் 19 >

## மண்டைதீவில் கைக்குண்டு

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு பகுதியிலுள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து, கைக்குண்டு ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. 19 >

## யாழ்.நகர காணி இராணுவத்துக்கு தாரைவார்ப்பு

*கஜேந்திரன் எம்.பி. எதிர்ப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். நகரில் ஒன்றரை ஏக்கர் காணியை இராணுவத்துக்கு வழங்கும் முடிவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள் 19 >

## முல்லையிலிருந்து தப்பியோடியவருக்கு கொரோனா

**முல்லைத்தீவில் அச்சம்**

முல்லைத்தீவு, ஜூலை 8

முல்லைத்தீவின் நாயாற்றில், தென்பகுதியைச் சேர்ந்த 13 பேருக் 19 >

## தமிழரசின் பொறுப்புகளிலிருந்து விலகினார் மாவையின் மகன்!

யாழ்ப்பாணம், ஜூலை 8

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ.சேனாதிராசாவின் மகன் கலையமுதன், கட்சியின் அனைத்து பொறுப்புக்களிலிருந் 19 >

## சாவு 38 தொற்று 1,229

கொழும்பு, ஜூலை 8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 38 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. அதன்படி நாட்டில் 18 >

## ஹெய்ட்டி ஜனாதிபதி படுகொலை



கொழும்பு, ஜூலை 8

ஹெய்ட்டி ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸ், அவரது வீட்டில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று 19 >

## சகல ஆசிரியர்களுக்கும் திங்களிலிருந்து தடுப்பூசி

(விரிவு : பக் 12)



முல்லை வாள்வெட்டு:

## சந்தேகநபர்கள் 6 பேர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்தீவு செல்வபுரத்தில் வீடொன்றுக்குள் புகுந்து ஒருவருக்கு வாளால் வெட்டியும் சொகுசுகாரை எரியூட்டியும் அட்டூழியத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச் 19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக நிறுவனப் பணிப்பாளர்கள் கைது விளக்கமளிக்க நீதிமன்றம் அழைப்பாணை

**கொழும்பு, ஜூலை 8**

**இணைய ஊடக நிறுவனத்தின் பணிப்பாளர் டிவினியா நிலுசினியின் தடுப்புக்காவல் தொடர்பில் விளக்கமளிக்க எதிர்வரும் 13 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே அழைப்பாணை விடுத்துள்ளார்.**

டென்மார்க்கை தலைமையகமாக கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிய இணைய ஊடகத்தின் பணிப்பாளர் டிவினியா நிலுசினியைக் கைது செய்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தடுப்புக்காவலில் வைத்துள்ளமை சட்டரீதியற்றதென நேற்று முன்தினம் மாலை, நகர்த்தல் பத்திரம் ஊடாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வாதத்தை முன்வைத்திருந்தார்.

அதனை ஆராய்ந்தே கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே இந்த அழைப்பாணையை பிறப்பித்தார்.

இந்த கைது தொடர்பில் மார்ச் மாதம் 26ஆம் திகதி பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி இணையத் தமிழ் ஊடகத்தின் பணிப்பாளர் டிவினியா நிலுசினியும் அந்த இணைய ஊடக நிறுவனத்தின் உதவிப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பணிப்பாளர் விமல்ராஜ் என்பவரும் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பின்னர் கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவு தலைமையகத்துக்கு கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக பொலிஸ் தரப்பால் கூறப்பட்டது.

இந் நிலையிலேயே தவராசா நகர்த்தல் பத்திரம் ஊடாக மேற்படி வாதங்களை முன்வைத்திருந்தார்.

கைது செய்யப்பட்ட டிவினியா நிலுசினி தங்காலை தடுப்பு முகாமிலும் விமல்ராஜ் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தலைமையகத்திலும் 3 மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை தடுத்து வைத்து விசாரணை செய்ய பயங்கரவாத தடைச்சட்டத்தின் 9(1) ஆம் அத்தியாயம் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சரால் வழங்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவு அவசியமாகும்.

இந்த விவகாரத்தில் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டதாகவோ அல்லது தடுப்பு காவலில் இருக்கும் கைதிக்கு அவ் உத்தரவின் பிரதிகள் வழங்கப்பட்டதாகவோ கைது செய்யப்பட்ட நாளிலிருந்து இன்று வரை எவ்வித அறிவித்தல்களும், அறிக்கைகளும் இம்மன்றுக்கு வழங்கப்படவில்லை.

அவர்களின் கைதும் தடுத்து வைப்பும் சட்டத்துக்கு முரணானது. சட்டவிரோதமான கைது. தடுப்புக் காவலுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய டிவினியா நிலுசினியின் அறிவுறுத்தல்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

நாட்டில் கொரோனா பரவல் அச்சுறுத்தல் உள்ள நிலையில், நேரில் சந்திக்க சந்தர்ப்பம் வழங்கப்படாது விடினும் குறைந்த பட்சம் தொலைபேசி ஊடாக அறிவுறுத்தல்களை பெறுவதற்கு நடவடிக்கை வேண்டும்.

அவருடன் பலமுறை தொலைபேசியில் கதைக்க எனது இளநிலை சட்டத்தரணி பலமுறை விண்ணப்பித்த போதிலும் பொலிஸாரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, பயங்கரவாத தடைச் சட்டத்தின் 9(1) ஆம் அத்தியாயம் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சரால் வழங்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவு 3 மாதங்களின் பின்னர் புதுப்பிக்கப்படவேண்டும்.

எனது சேவை பெறுநர் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்கள் முடிவடைந்து விட்டது.

இன்று வரை குறித்த தடுப்புக் காவல் கட்டளை தொடர்பாகவோ அவர்களின் கைது தொடர்பாகவோ எந்த அறிக்கையும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த விடயங்களை ஆராய்ந்து பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பனிப்பாளரை இந்த மன்றுக்கு அழைத்து இந்த விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்க உத்தரவிட வேண்டும், என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கோரினார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே, பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு இம்மாதம் 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பினார். (ஒ.5)



## கம்மன்பிலவை ஆதரிப்பதா? அரசிலிருந்து வெளியேறுவதா?

*மைத்திரி தலைமையில் இன்று கூடுகின்றது சு.க.*

கொழும்பு, ஜூலை 8

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறும் என்று கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான சிறிலங்கா பொதுஜன முன்னணியின் சில உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துக்கள், நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து பேசப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பிற்பகல் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, இன்றைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று செய்திகள் வெளியாகியுள்ளன. (ஒ.22)

# நாடு இராணுவமயமாக்கலை நோக்கிச் செல்கின்றது

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு திடீர் ஞானோதயம்*




கொழும்பு, ஜூலை 8

நாளொன்றுக்கு ஒரு மில்லியன் தடுப்பூசிகளை செலுத்தும் வினைத்திறனை சுகாதாரத்துறை கொண்டுள்ள நிலையில், தடுப்பூசிகள் ஏற்றும் பொறுப்பு இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளமை சுகாதாரத் துறைக்குள்ளும் இராணுவத்தினரின் ஆதிக்கம் அதிகமாகி விட்டது என்பதையே காட்டுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான வாசன் ரண்டசிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலே பல விடயங்கள் கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்றன. அவை இந்த நாடு இராணுவ மயமாக்கலை நோக்கிச் செல்கின்றதா என்ற பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் ஆரம்பத்தில் வினைத்திறனாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. நாளொன்றுக்கு சராசரியாக ஒரு லட்சத்து 79 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது இந்தத் திட்டம் பல மருத்துவமனைகளில் தடைப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் தற்போது இராணுவ மருத்துவமனைக்கும் இராணுவ முகாம்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

சுகாதாரத்துறை முன்னின்று செயற்பட வேண்டிய விடயத்தை இராணுவ மயப்படுத்தியதன் விளைவாகவே, இந்தத் தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளதென்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கருதுகின்றது.

ஆரம்பத்தில் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு வினைத்திறனாகச் செயற்படவில்லை. இதையடுத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக முன்வைத்து எவ்வாறு தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என்று நாம் வழிகாட்டியிருந்தோம். ஆனால் தற்போது அவை இராணுவ மருத்துவமனைக்குச் செல்கின்றன.

தடுப்பூசி வழங்கும் பொறிமுறையைக் குழப்புவதன் நோக்கம் என்ன? சுகாதாரத்துறைக்கு நாளொன்றுக்கு ஒரு மில்லியன் தடுப்பூசி வழங்கும் இயலுமை உள்ளது. ஆனால் இராணுவம் இதற்குள் அழைக்கப்பட்டமை ஏன்? சுகாதாரத்துறையை இராணுவம் பொறுப்பேற்கப் போகின்றது என்பதற்கான அறிகுறியாகவே இது தென்படுகின்றது- என்றார். (ஒ.ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் ஏற்றப்படவுள்ளன ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**கிளிநொச்சி.ஜூலை 8**

**கிளிநொச்சி மாவட்டத்துக்கு கிடைத்த 5 ஆயிரம் தடுப்பூசிகளில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளும் ஏற்றப்படவுள்ளன என்று மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கொவிட் தடுப்பூசி மற்றும் தொற்று நிலவரம் தொடர்பான ஊடக சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுவது போன்று தென்படவில்லை. இந்த செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றபோது மக்கள் ஆர்வம் காட்டுவார்கள் என்று நம்புகின்றோம். கிளிநொச்சி நகர்ப்புறங்களில் உள்ள மக்கள் ஆர்வத்துடன் வந்து தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 5 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறைந்த அளவிலான தடுப்பூசிகளே ஏற்றி முடிக்கப்பட்டுள்ளன. அதேவேளையில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளையும் ஏற்றுமாறும் அரசாங்கத்தால் கூறப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக அவர்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கு சுகாதார திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது-என்றார். (ஐ-13)

# இலங்கையின் எரிபொருள் சந்தையும் சீன வசமாகுமா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி வலுசக்தி அமைச்சர் மறுப்பு

கொழும்பு, ஜூலை 8

இலங்கையில் எரிபொருள் விநியோகத்துக்கான பொறுப்பை சீனாவுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கோ வழங்குவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே,

'நாட்டில் எரிபொருள் விநியோகத்துக்கான நடவடிக்கை சீன நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது என சமூகத்தில் கதை அடிபடுகின்றது. சமூகத்தில் கதைக்கப்படும் விடயங்கள் இந்த ஆட்சியின்கீழ் நடந்தும் உள்ளன. இது உண்மையா என்பதை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு உண்மையாக இருந்தால் மின் விநியோக பொறுப்பும் சீன வசமாகும்' என்று சுட்டிக் காட்டினார். இதற்கு பதிலளித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில,

'சீனாவுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கே எரிபொருள் விநியோக நடவடிக்கையை ஒப்படைப்பது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் கலந்துரையாடல்கூட இடம்பெறவில்லை. இதனை மிகவும் பொறுப்புடனேயே கூறுகின்றேன்.' - என்றார். (ம-44)

# ரஷ்ய தடுப்பூசிகள் 50,000 வந்தடைவு

கொழும்பு.ஜூலை 8

ரஷ்யாவில் உற்பத்திசெய்யப்படும் ஸ்புட்னிக்வி தடுப்பூசியின் 50 ஆயிரம் டோஸ்கள், இலங்கைக்குக் கிடைத்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

குறித்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நேற்று அதிகாலை 12.35 மணியளவில் வந்தடைந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)





# நாடாளுமன்ற ஆவணத்தில் கையெழுத்திட்டார் பஸில்

கொழும்பு.ஜூலை 8

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றுக்குள் நுழைவதற்கான ஆவணங்களில் நேற்றுக் கையெழுத்திட்டுள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் உறுப்பினராக அவரது பெயர் வர்த்தமானியில் நேற்று வெளியானது.

தன்னுடைய பதவியை இராஜினாமா செய்த, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின், வெற்றிடத்தை நிரம்புவதற்கு, பஸில் ராஜபக்சவின் பெயர் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவர் இன்று நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# ஆசிரியர்களுக்கு ஏற்றவும் வந்தது கொவிட் தடுப்பூசி

சாவகச்சேரி, ஜூலை 8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கவென ஆயிரத்து 74 கொவிட் - 19 தடுப்பூசிகள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சால் பாடசாலைகள் திறப்பதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டதையடுத்து ஆசிரியர்கள் பலர் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஆர்வத்துடன் தினமும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் விசாரித்து வருகின்றனர் .

எதிர்வரும் 12 ஆம் திகதி நாடு முழுவதும், உள்ள பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளின் சகல ஆசிரியர்களுக்கும் வயது வேறுபாட்டின்றி தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# தாதியர்கள் இன்று எதிர்ப்புப் பரப்புரை

கொழும்பு.ஜூலை 8

அரச தாதியர் அதிகாரிகள் சங்கத்தினர் இன்று வியாழக்கிழமை நாடு முழுவதும் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவிக்கையில்,

பதவி உயர்வு மற்றும் ஊழியர்களின் நிலை தொடர்பான இரண்டு அமைச்சரவை ஆவணங்களுக்கு ஒப்புதல் வழங்காமல், அது தொடர்பான தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எமது கோரிக்கைகளைக் கருத்தில் கொள்ளாமல், புறக்கணித்த அமைச்சரவை முடிவுக்கு அதிருப்தியைக் காண்பிப்பதற்காக, நாடு முழுவதும் எதிர்ப்பு பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கான பொறுப்பை, உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிய அதிகாரிகளே ஏற்க வேண்டும்.

பொது சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கம் முன்வைத்த ஏழு கோரிக்கைகளில் ஐந்துக்கு தீர்வுகளை உடனடியாக வழங்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுத்தார்.

எனினும் ஏனைய இரண்டு கோரிக்கைகள் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் போது நிறைவேற்றப்படும். இருப்பினும் வாக்குறுதிகளை நம்ப முடியாது. இரண்டு கோரிக்கைகளையும் அமைச்சரவை அங்கீகரிக்க வேண்டும், இல்லையேல் எமது போராட்டம் தொடரும்- என்றார். (ஒ.4)

# மீசாலையில் ஆசிரியை வீட்டில் ஆயுத முனையில் கொள்ளை

சாவகச்சேரி, ஜூலை 8

மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் வீட்டுனுள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணியளவில் மீசாலை பங்களா வீதியில் இடம்பெற்றுள்ளது.

இரவு 11.00 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. அவ்வேளையில் ஆசிரியை கதவைத் திறந்து. வெளியே சென்றதால் கொள்ளையர்கள் உள்ளே நுழைந்துள்ளனர். அவர்களில் சிலர், அங்கிருந்த பெண்ணின் கணவன் மற்றும் மாமன் ஆகியோரை ஆயுத முனையில் வைத்திருக்க மற்றவர்கள் சல்லடை போட்டுத் தேடி தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆசிரியையான பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை. மீசாலை மேற்குப் பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் திருடர்கள் நடமாடுகின்றனர் என்று கிடைத்த தகவல்களையடுத்து இரவிரவாக அப்பகுதி இளைஞர்கள் நாலாபுறமும் தேடினர் என வட்டார உறுப்பினர் அ.பாலமயூரன் தெரிவித்தார். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத்தங்கல் நிலையத்தில் கர்ப்பிணித் தாதியர் கடமை

## மருத்துவமனை நிர்வாகத்துக்கு தாதியர் சங்கம் கடிதம்

**கொடிகாமம், ஜூலை 8**

**சாவகச்சேரி மருத்துவமனையில் இயங்கும் கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் கர்ப்பிணியான தாதியை கடமைக்கு அமர்த்தியமை தொடர்பில் வடமாகாண தாதியர் சங்கம் மருத்துவமனை நிர்வாகத்துக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளது.**

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமையாற்றும் குறித்த தாதியர், கர்ப்பிணிப் பெண்ணாக இருந்த நிலையில் அவரை கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் கடமை ஆற்றுவதற்கு மருத்துவமனை நிர்வாகம் பணித்தமையால் குறித்த சம்பவத்தை உள்ளடக்கியே மருத்துவமனை நிர்வாகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

அதுமட்டுமல்லாது குறித்த மருத்துவமனையில் இடம்பெற்ற மேலதிக நேரக் கடமை வழங்குவதில் பாரபட்சம், தாதிய உத்தியோகத்தர் ஒருவரை பதில் கடமைக்காக அடிக்கடி விடுதிகளுக்கு இடமாற்றியமை, தாதிய பரிபாலகர் அலுவலகம் தொடர்ச்சியாக இயங்காமை, மாலை 4 மணிக்குப் பின்னர் தாதிய பரிபாலகர் இல்லாத சந்தர்ப்பத்தில் பதிற்கடமை நியமிக்கப்படாமை மற்றும் உள்ளக இடமாற்றங்களை வழங்கும்போது பொதுவான கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளாது பக்கச்சார்பான முறையில் முடிவுகளை மேற்கொள்ளல் போன்ற குற்றச்சாட்டுகளும் குறித்த கடிதத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. (ப-159)





## 'சௌபாக்கிய உற்பத்தி கிராமம்' கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை 8

"சௌபாக்கிய உற்பத்தி கிராமம்" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி பிரமந்தனாறு கிராமத்துக்கான வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்.

சமுர்த்தி வதிவிட பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சால் நாடளாவிய ரீதியில் சௌபாக்கிய உற்பத்தி கிராமம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பிரமந்தனாறு கிராமம் முருங்கை மற்றும் நிலக்கடலை உற்பத்தி கிராமமாக தெரிவுசெய்யப்பட்டு அதற்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் ஆரம்ப நிகழ்வில் நிலக்கடலை பயிரிடப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 240 பேர் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், விவசாய உற்பத்திக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான உறுதிப்படுத்தல் கடிதங்களும் வழங்கப்பட்டன. (ஐ-113)

## தண்ணீர்ப் போத்தல்கள் நேற்றுமுன்தினம் கையளிப்பு

மன்னார்,ஜூலை 8

மன்னார் மாவட்டச் செயலரின் வேண்டுகோளுக்கு அமைவாக மன்னார் மெசிடோ நிறுவனத்தால் ஒரு தொகுதி குடிதண்ணீர்ப் போத்தல்கள் கையளிக்கப்பட்டன.

மாவட்டத்தில் தற்போது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் முதியோர்களுக்கு வழங்குவதற்காக இந்த தண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரிகளிடம் ஒரு தொகுதி தண்ணீர் போத்தல்கள் மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களால் வழங்கப்பட்டன. (ஐ-213)




## கௌரவிப்பு

தென்மராட்சி,ஜூலை 8

ஐந்து தசாப்த காலமாக மருத்துவம் மற்றும் சமூக ஆன்மீக பணிகளில் ஈடுபட்ட மருத்துவர் சின்னத்தம்பி அருளானந்தத்துக்கான சதாபிசேக நிகழ்வும் அமுத விழாவும் மீசாலை கிழக்கு அருள்மிகு சித்திர வேலாயுதர் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

இவரின் சேவையை பாராட்டி ஆலய நிர்வாகத்தால் 'ஆத்ம வியூகன்' எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் போக்கட்டி அ.த.க.பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் வாழ்த்துரை வழங்கினார். (ஐ-159)



## 'குடு' போதைப்பொருளுடன் மூவர் கைது



புதுக்குடியிருப்பு, ஜூலை 8

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 'குடு' போதைப் பொருளுடன் 3 பேர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 8 கிராம் குடு மீட்கப்பட்டுள்ளது. இவர்கள் கைவேலி, கோம்பாவில் மற்றும் யாழ்ப்பணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட நபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)

### வன்னேரிக்குளத்தில்

# 35 வருடங்களுக்குப் பின்னர் விவசாய வீதிகள் சீரமைப்பு

கிளிநொச்சி, ஜீலை 8

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாகச் சீரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட விவசாய வீதிகள் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்று மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியிலாளர் இராஜகோபு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் குடியேறக் கிராமமான வன்னேரிக்குளத்தின் கீழுள்ள விவசாய வீதிகள் மற்றும் நீர்ப்பாசன வாய்க்கால்கள் என்பவை கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக எந்தவித சீரமைப்பு பணிகளுமின்றிக் காணப்பட்டன.

இந்த நிலையில் வன்னேரிக்குளத்தின் கீழுள்ள விவசாய வீதிகள் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (சியாப்) கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

வன்னேரிக்குளத்தின் கீழுள்ள பிரதான நீர் விநியோக வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்கள் மற்றும் விவசாய வீதிகள் ஆகியவை சீரமைக்கப்படாத நிலையில் கடந்த காலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும்போது, விவசாய நிலங்களுக்கு செல்வதற்குரிய வீதிகள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தோம் என்றும், தற்போது இந்த வீதிகள் சீரமைக்கப்படும்போது, இதுவரை காலமும் எதிர்கொண்ட பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைக்கவுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ப-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்தைக் கட்டடத்தை பயனுள்ளதாக மாற்றுக

*ஐயன்குளம் விவசாயிகள் கோரிக்கை*

முல்லைத்தீவு, ஜுலை 8

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் சந்தைக் கட்டடத்தை நெல் கொள்வனவு நிலையமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் ஐயன்கன்குளம் கிராமத்தில் இச் சந்தைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை இச் சந்தை இயங்கவில்லை. இதற்கான முக்கிய காரணம் இக் கிராமத்தில் கூடுதலான மக்கள் மரக்கறி உற்பத்தியில் ஈடுபடுகின்றதன் காரணமாக சந்தைக்கு வருவதில்லை. இதனால் துணுக்காய் பிரதேச சபைக்கு இச் சந்தையை இயக்குவதில் பலத்த சவால் காணப்படுகின்றது. இந்நிலையில் இச் சந்தைக் கட்டடத்தை நெல் கொள்வனவு நிலையமாக மாற்றுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும் அல்லது துணுக்காய் பிரதேச சபை பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றை இயங்கச் செய்வதற்கான வழியை உருவாக்கவேண்டும்.

குறிப்பாக இப்பகுதி மாணவர்கள் தமக்குத் தேவையான கற்றல் உபகரணங்களைக் குறைந்த விலையில் வாங்கக்கூடிய நிலையம் ஒன்றை உருவாக்க வேண்டும். தற்போது இந்த சந்தைக் கட்டடம் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது. குறித்த கட்டடத்தை பயனுள்ளதாக மாற்றுவதற்கு துணுக்காய் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)

# இலங்கைச் சட்டங்கள் சீன நாட்டவருக்கு விதிவிலக்கா?

*கிளி. மீனவ சம்மேளனத் தலைவர் கேள்வி*

கிளிநொச்சி, ஜூலை 8

**இலங்கையைச் சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமாக அட்டைப் பண்ணை அமைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சீன நாட்டவர் அமைத்தால் அவர்களுக்கு சட்ட நடவடிக்கை இல்லையா என கிளிநொச்சி மாவட்ட மீனவ சம்மேளனத்தின் தலைவர் வைத்திலிங்கம் பாலசுரேஷ் கேள்வி எழுப்பினார்.**



கிளிநொச்சி ஊடக அமையத்தில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி கௌதாரிமுனையில் உள்ள பூவரசன் தீவில் சட்டவிரோதமாக சீன நாட்டவர்கள் எந்த ஒரு அனுமதியும் பெறாமல் அட்டைப் பண்ணை அமைத்து தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களைத் தடுப்பதற்கு அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்குத் தைரியமில்லை.

எமது மக்கள் இவ்வாறு செயற்பட்டால் உடனடியாக அவற்றைப் பிடுங்கி எரிந்துவிடுவார்கள். எனவே சீன நாட்டவருக்கு ஒரு சட்டமும். இங்கு இருப்பவர்களுக்கு இன்னொரு சட்டமுமே நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது- என்றார். (ப-214)

## களப் பணியாளர்களுக்கு இன்று முதல் தடுப்பூசி

சாவகச்சேரி,ஜுலை 8

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் களப் பணியாளர்களுக்கு இன்று தொடக்கம் நாளைமறுதினம் சனிக்கிழமை வரை கொவிட் - 19 தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகம், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் பணியகம், உள்ளூராட்சி சபைகள், அஞ்சல் அலுவலகங்கள், ஆயுள்வேத மருத்துவமனை, கால்நடை மருத்துவர் பணியகம் போன்றவற்றில் பணியாற்றும் களப் பணியாளர்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் தடுப்பூசி மருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

## வவு.தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் தொலைக்கல்வி நடவடிக்கை ஆரம்பம்

வவுனியா,ஜுலை 8

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கான தொலைக்கல்வி நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கொவிட் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்கும் வகையில் இந்த தொலைக்கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலையின் கணினி கற்றல் வள நிலையத்தில் அதிபர் ஆ.லோகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

பிரதேச தொலைக்கல்வி மத்திய நிலையங்களை அமைத்தல் தொடர்பான கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஒரு பிரதேச தொலைக்கல்வி மத்திய நிலையமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி இணையத்தள வசதிகள் அற்ற தரம் 11 மற்றும் 6 ஆம் வகுப்புகளைச் சேர்ந்த 20 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் நிகழ்வில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன், வவுனியா தெற்கு வலய வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஜ-20)



# பொலிஸாரால் அச்சத்தை விதைத்து எதனை சாதிக்கப்போகின்றீர்கள்

*நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. கேள்வி*

மன்னார், ஜுலை 8

நாட்டில் உள்ள மக்கள் மத்தியில் பொலிஸார் ஊடாக அச்சத்தை விதைத்து எதனைச் சாதிக்கப்போகின்றீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நாடாளுமன்றத்தில் மேலும் உரையாற்றுகையில்;

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில பொலிஸார் எனது தொலைபேசி அழைப்புக்கு பதிலளிப்பது இல்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான எனது தொலைபேசி அழைப்புக்குப்பதிலளிப்பதுஇல்லை. அவ்வாறானவர்களின் பெயர்களை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களை விடுதலைசெய்யுமாறு கோருவதற்காக அவர்களுக்கு அழைப்பை ஏறபடுத்துவ[illegible]தில்லை. தொடர்ச்சியாக அண்மைக்காலமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். காலை 9 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் 10 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் என அழைத்து கைது செய்யப்படுகின்றனர். இதன் காரணமாக தற்போது இளைஞர்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுகின்றனர். அதேபோன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் வைத்து தமிழ் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சிவில் உடையில் வரும் பொலிஸாரே இவ்வாறு கைதுசெய்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்கு அழைப்பை ஏற்படுத்தினால் அவர்கள் அதற்குப் பதிலளிப்பதில்லை. அமைச்சர் சரத் வீரசேகர போன்றோரே அந்தச் சந்தர்ப்பங்களில் எங்களுக்கு உதவிசெய்கின்றனர். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனை பிரதேச சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் தோற்றுவிடுவோம் என்ற நிலையில் பிள்ளையானின் கட்சியினர் இருந்த போது, குழப்பத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டனர். வாக்கெடுப்பு நிறை வேற்றப்பட்டதன் பின்னரே பிள்ளை யானின் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இவ்வாறுதான் மட்டக்களப்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் உள்ளன. மட்டக்களப்பில் ஒரு இடத்தில் ஒருவர் கஞ்சா போதைப் பொருள் வைத்துள்ளார் என பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு நடந்தது என்ன? போதைப்பொருள் வைத்திருந்தவர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தவரின் வீட்டுக்குச் சென்று சத்தம் போட்டுள்ளார். இதுதான் அங்கு நடக்கின்றது - என்றார். (ப)

### வவுனியாவில்
## சடலமாக மீட்கப்பட்ட சிறுவனுக்கு பி.சி.ஆர்.

வவுனியா, ஜுலை 8

வெட்டுக்காயங்களுடன் வவுனியாவில் சடலமாக மீட்கப்பட்ட சிறுவனுக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. லக்சபான வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் பின்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டன. சிறுவனின் மரணம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் சிறுவனின் குடும்பத்தினர், சகோதரன், சகோதரனின் நண்பன் ஆகியோரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் முடிவுகளின் பின்னரே பிரேத பரிசோதனை இடம்பெறும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ப-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தென்மராட்சி பிரதேசத்திலும் நேற்று ஏற்றப்பட்டது தடுப்பூசி

கொடிகாமம், ஜூலை 8



தென்மராட்சி பிரதேசத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சி.சுதோக்குமாரின் மேற்பார்வையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனை, வரணி பிரதேச மருத்துவமனை, கைதடி ஆரம்ப சிகிச்சை நிலையம், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் மட்டுவில் மகா வித்தியாலயம் ஆகிய ஐந்து இடங்களில் நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது. (ஐ-159)

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று வவுனியாவில் தடுப்பூசி

வவுனியா, ஜூலை 8



வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணி முதல் மதியம் வரை காமினி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவு மற்றும் இறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கே தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அதிகளவான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் மாவட்டச் செயலர் சமன்பந்துலசேன, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன், பிரதேச செயலர் நா.கமலதாசன், வைத்தியர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)

# உரத்துக்காக ஒன்றுகூடிய விவசாயிகளால் பதற்றம்

முல்லைத்தீவு, ஜூலை 8




**ஒட்டுசுட்டான் கமநல சேவைத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்ட நிலையில் கமநல சேவைத் திணைக்களத்தின் முன்னால் விவசாயிகள் நேற்று ஒன்று கூடினர். இதனால் அங்கு பொலிஸாருக்கும் விவசாயிகளுக்கும் இடையில் பதற்றநிலை ஏற்பட்டது.**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 33 கமக்கார அமைப்புக்கள் காணப்பட்டாலும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைளர்களுக்கு ஒரு விவசாயிக்கு ஒரு அந்தர் உரம் வழங்கப்படும் என்று கமநல சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது. .கமநல சேவைகள் திணைக்களத்தால் எந்தவித திட்டமிடல்களும் மேற்கொள்ளப்படாமல் விவசாயிகளுக்கு குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளும் நேற்றுக் காலை கமநல சேவைத் திணைக்களத்தின் முன்னால் சூழ்ந்தனர்.

நாட்டில் கொரோனாத் தொற்று அபாயம் காணப்படுகின்றது என்று தெரிவித்த பொலிஸார் விவசாயிகளை கமநல சேவைத் திணைக்களத்தின் இருந்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போது விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. நாட்டில் உரத் தட்டுப்பாடு நிலவிவரும் வேளையில் சரியான விவசாயிகளைத் தெரிவுசெய்து அந்த விவசாயிகளுக்கான உரத்தை வழங்கும் நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் கமநல சேவைத் திணைக்களம் ஈடுபடவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஒரு தொகை உரம் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு வந்துள்ளது என்றும், இந்த உரம் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்று, தெளிவான தகவலை விவசாயிகளுக்கு கமநல சேவைத் திணைக்களம் வழங்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ப-19)



## கிளிநொச்சி அபிவிருத்தியை சீர்குலைக்க திட்டமிட்ட எதிர்ப்பரப்புரை நடவடிக்கைகள்

*டக்ளஸின் இணைப்பாளர்கள் குற்றச்சாட்டு*

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை சீர்குலைக்க திட்டமிட்ட வகையில் எதிர்ப்பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் டக்ளஸின் இணைப்பாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலகத்திலும், முழங்காவில் விநாயகர் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் நடைபெற்ற சௌபாக்கிய சமுர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் உற்பத்திக் கிராம நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

மாவட்டத்தில் விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், உட்கட்டுமான அபிவிருத்தி என்று பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், இந்தப் பணிகள் தொடர்பான தவறான பிரசாரங்கள் சில தரப்புக்களால் ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகம் முழுவதையும் கொவிட் தொற்று ஆட்டிப்படைக்கும் சூழ்நிலையிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் அதன் தாக்கத்தைக் குறைப்பதற்காகப் பாடுபடும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினர் தொடர்பான நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, கொவிட் கட்டுப்பாட்டுப் பணியில் அயராது உழைக்கும் சுகாதாரத் துறையினரை மன உழைச்சலுக்கு உள்ளாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியிருக்கும் ஆடைத் தொழிற்சாலையை கொவிட் தொற்றைக் காரணம்காட்டி மூடச்செய்வதற்கு முயற்சித்த சில தரப்புக்கள், கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தி, ஊழியர்களுக்கு தடுப்பூசியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், தடுப்பூசி வழங்கப்பட்டவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது என்று குழப்ப மேற்படுத்தும் தகவல்களைப் பரப்பியுள்ளனர். கொவிட் ஆபத்தையும் பொருட்படுத்தாமல், பூநகரி பிரதேசத்தின் அனைத்து கடற்றொழில் கிராமங்களுக்கும் கடற்றொழில் அமைச்சரும், ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று கடற்றொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முயற்சிகளை மேற்கொண்[illegible] நிலையிலும், கடற்றொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற விதமான ஊடகப் பிரசாரங்கள் சிலரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றனர். (ப-13)

## முல்லைத்தீவு நகரில் ஆள்களற்ற வீடுகளைத் துப்புரவுசெய்யுங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 8



முல்லைத்தீவு நகரத்தில் குடும்பங்கள் வசிக்காத வீடுகள் பற்றைகள் மூடிக் காணப்படும் நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச சபை குறித்த வீடுகளை தமது பொறுப்பில் எடுத்து துப்புரவுசெய்ய வேண்டும் என முல்லைத்தீவு நகர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் கரைதுறைப்பற்று பிரதேச சபையால் தமது எல்லைப்பரப்பில் ஆள்களற்ற வீடுகள், காணிகள் உரிய பயனாளிகள் இல்லாத நிலையில் தமது பொறுப்பில் குறித்த காணிகள், வீடுகளைப் பொறுப்பெடுத்து துப்புரவு செய்யப்படும் என அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. துப்புரவுப் பணிகளிலும் பிரதேச சபை ஈடுபட்டிருந்தது. ஆனால் முல்லைத்தீவு நகரத்தில் பல வீடுகள் ஆள்களற்ற நிலையில் பற்றைகள் மூடிக் காணப்படுகின்றன. ஆள்களற்ற வீடுகள் பாம்புகள், விலங்குகளின் [illegible] உறைவிடமாக மாறி உள்ளன. 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போராலும் ஆழிப்பேரலையாலும் பல குடும்பங்கள் முல்லைத்தீவு நகரில் இல்லாத நிலையில் பல வீடுகள் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன எனவே பிரதேச சபை தமது சட்டவரையறைக்குள் உட்பட்ட வகையில் ஆள்களற்ற வீடுகளைப் பொறுப்பெடுத்து துப்புரவுசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரே அவதானம்!

பாடசாலைகள் ஆரம்பிக்கும் வரை சிறுவர்கள் ஆபாச இணையத்தளங்களை அணுகுவதற்கான ஏது நிலைகளை இல்லாமல் ஆக்கவேண்டும் என்று மகளிர் மற்றும் குழந்தைகள் பணியகத்திடமும் துறைசார் அதிகாரிகளிடமும் கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம கோரிக்கை விடுத்துள்ளார்.


சிறுமி ஒருவரை இணையத்தில் காட்சிப்படுத்தி பாலியல் நடத்தைக்கு விற்பனை செய்த வழக்கு விசாரணையின்போதே நீதிவான் இந்தக் கோரிக்கையை துறைசார் அதிகாரிகளிடம் விடுத்துள்ளார். இதை மிகச் சாதாரணமான ஒரு விடயம் என்று எண்ணிக் கடந்துவிட முடியாது. 'வீட்டுக்கு வீடு வாசல்படி' என்பதைப்போன்று இன்று ஒவ்வொரு வீட்டிலும் இந்தப் பேராபத்து நிலைகொண்டுள்ளது. எம் குழந்தைகள் அந்த ஆபத்துக்குள் விழுந்து விடுகின்றார்களா அல்லது கடந்து விடுகின்றார்களா என்பது எமது கண்காணிப்பிலும் விழிப்புணர்வு நடவடிக்கையிலும் தான் உள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாடெங்கிலும் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் நீண்ட காலமாகவே மூடப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்குரிய சூழல் ஏற்படுத்தப்படுகின்ற போதிலும் கூடிய விரைவில் அது சாத்தியமா என்பது பெரும் சந்தேகம்தான். இத்தகையதொரு பின்னணியில் இலங்கையில் கற்றல் நடவடிக்கையே இணையத்தையும் சூம் செயலியையும் நம்பியதாக மாறிவிட்டது. அதாவது தொடுதிரை (ஸ்மார்ட்) அலைபேசிகள் இன்று சிறுவர்களுக்குக் கிடைப்பது அத்தியாவசியம் என்றாகிவிட்டது. அதில்தான் சாதகமும் பாதகமும் நிறைந்துள்ளது.

எம் குழந்தைகள் அன்னப்பட்சிகள் போன்று இணையத்தில் தமக்குத் தேவையானதை எடுத்துவிட்டு தேவையற்றதை நீக்கிவிடுவார்கள் என்பதுதான் ஒவ்வொரு பெற்றோரின் உச்சக்கட்ட நம்பிக்கை. ஆனால் இன்று சிறுவர்களின் அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட இந்த தொடுதிரை அலைபேசிகள் ஏராளம் சிறுவர்களை சீரழித்துக் கொண்டிருக்கின்றன என்பதே கசப்பான உண்மை.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான அரட்டைத் தளங்களையும், நீலப் படங்களையும், ஆபாசத் தளங்களையும் இன்று சிறுவர்கள் மிகமிக இலகுவாக நாடிவிடக்கூடியவர்களாக இருக்கின்றனர். சிறுவர்களை இத்தகைய ஆபாசத் தளங்களுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு எந்த இறுக்கமான பொறிமுறையும் இணையத்தளங்களில் இல்லை. இந்தக் கட்டற்ற ஆபாச உலகில் இன்று எத்தனையோ சிறுவர்கள் தம்மைத் தொலைத்துவிட்டனர். தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டு விட்டனர். அவர்களை மீண்டும் சீர்திருத்தி சமூக மயப்படுத்துவது பெரும்பாடாக ஆகிவிட்டது.

வீட்டில் சிறுவர்கள் இருக்கின்ற இந்தக் காலம் பெற்றோருக்குக் கத்திமுனையில் நடப்பதைப்போன்றது. நீதிவானின் இந்தக் கனதியான கோரிக்கை வெறுமனே துறைசார் அதிகாரிகளுக்கானது அல்ல. நீதிவான் வலியுறுத்தியது பொதுவான பொறிமுறை. அதைவிட பல மடங்கு பொறுப்பு பெற்றோராகிய உங்களுக்குத்தான் உள்ளது. உங்கள் குழந்தைகளுடன் வழக்கத்தை விடவும் மேலாக கூடிய அளவு நேரத்தை செலவிடும் காலமிது. இணையக் கற்றலில் உங்கள் பிள்ளைகள் ஈடுபடும்போது அவர்கள் உங்கள் கண்காணிப்பில் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். இணையவெளிக் கற்றல் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தொடுதிரை அலைபேசிகளை உங்கள் பிள்ளைகளை விட்டுத் தூரமாக வையுங்கள். இந்த ஆபாச உலகம் மிக மோசமானது. அதற்குப் பூவென்றும் தெரியாது. கனியென்றும் தெரியாது. அவதானம் அவசியம்.



*மீண்டும் தலைதூக்கும் ஊடக ஒடுக்குமுறை!*

## சிரச ஊடகத்தின் ஒளிபரப்பு உரிமையை இரத்துச்செய்வதற்கு அரசு நடவடிக்கை

*சபையில் சஜித் தகவல்*

**கொழும்பு, ஜுலை 8**

**தற்போதைய ஆட்சியில் ஊடக ஒடுக்குமுறை இடம்பெறுகின்றது. சிரச ஊடக நிறுவனத்துக்கான ஒளிபரப்பு அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்து அதனை முடக்குவதற்கான முயற்சிகள் மேல் மட்டத்தில் இடம்பெற்றுவருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிரச ஊடக நிறுவனத்துக்கான ஒளிபரப்பு அனுமதி பத்திரத்தை ஏதேனும் அடிப்படையில் இரத்துச் செய்வது எப்படி என்பது தொடர்பில் அரச மேல் மட்டம், சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றது. இதனை பொறுப்புடனேயே குறிப்பிடுகின்றேன். நாட்டு மக்கள் உண்மை நிலவரத்தை அறிவதை தடுப்பதற்கான சூழ்ச்சித் திட்டமே இது.

இதற்கு முன்னர் சிரச ஊடக நிறுவனம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. நடுநிலையாக செயற்படும் சிரச ஊடகத்தை சட்ட பொறிமுறையைப் பயன்படுத்தி ஒடுக்க முற்படுவது ஏன்? சிரசமீது ஏன் அவ்வளவு பயம்? இவ்வாறான செயற்பாடு மூலம் நாட்டுக்கும், சர்வதேசத்துக்கும் அரசு வழங்கும் செய்தி என்ன? நான் பொறுப்புடனேயே இந்த விடயத்தை குறிப்பிடுகின்றேன். சிரச ஊடக நிறுவனம் ஒடுக்கப்படுவதற்கு இடமளிக்கமுடியாது. அதனை பாதுகாப்பதற்கு மக்களும் அணிதிரள்வார்கள். கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார்.

இவ்வாறு சஜித் பிரேமதாச உரையாற்றிக் கொண்டிருக்கையில் அவரின் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து ஒழுங்குப் பிரச்சினையொன்றை சஜித் எழுப்பினார். எதிரணி உறுப்பினர்களும் எழுந்தனர். சிரச ஊடகம் மீது கைவைப்பதற்கு இடமளிக்கப்படாது. அவ்வாறு செய்யமாட்டேன் என்ற உறுதிமொழியை அரசு வழங்க வேண்டும். இதற்கான அறிவிப்பு அவசியம். மீண்டும் கிளைமோர் தாக்குதல் நடத்த முற்படுகின்றதா என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இதன்போது குறுக்கீடுசெய்த சபாநாயகர், நீங்கள் ஐந்து நிமிடங்கள்தான் கோரினீர்கள். 11 நிமிடங்களை எடுத்துள்ளீர்கள் - என்றார்.

இதனையடுத்து ஒழுங்கு பிரச்சினைகளை எதிரணி உறுப்பினர்கள் எழுப்பிக்கொண்டிருந்தனர். ஊடக அடக்குமுறையைக் கண்டித்தனர். இவ்வாறு குழப்பத்துக்கு மத்தியில் அமைச்சர் பந்துல குணவர்தன உரையாற்றினார். எதிரணி பக்கம் இருந்து எதிரணி உறுப்பினர்கள், ஊடக சுதந்திரத்துக்காக குரல் எழுப்பினர். (ஒ.44)

## ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் தலையிடாதாம் கோத்தாபய அரசு!

கொழும்பு, ஜுலை 8

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, ஊடக சுதந்திரத்தில் கடுகளவேணும் தலையிட்டதில்லை. ஊடக நிறுவனங்களை ஒடுக்கப்போவதும் இல்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். நாடாளுமன்றம் நேற்றுமுற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

அமைச்சர் பந்துல தெரிவிக்கையில்,

ஊடகங்களை ஒடுக்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்ததில்லை. ஊடக நிறுவனத்துக்கு எமது அரசு என்ன செய்யவுள்ளது என்பதை வெளிப்படுத்தாமல், ஏதோவொரு தகவலை பிடித்துக் கொண்டு எதிரணியினர் பரப்புரை செய்கின்றனர். நாடாளுமன்ற அமர்வு நாள்களில் காலையிலேயே சபை நடவடிக்கைகளை குழப்புவதே அவர்களின் திட்டம்.

சிரச ஊடக நிறுவனம் ஒடுக்கப்படும் என யார் சொன்னது? ஏதேனும் சட்டவரைவு அல்லது கடிதம் உள்ளதா? அவ்வாறு எவுதும் இல்லாமல் ஊகத்தின் அடிப்படையில் கருத்து வெளியிட்டு உயரிய சபையைக் குழப்புவது அநீதியானது - என்றார். (ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியங்களின் பாதுகாப்பு: ஜப்பான் -இலங்கை கலந்தாய்வு

கொழும்பு,ஜூலை 8
கடற்பிராந்தியங்களின் பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பில் ஜப்பானும், இலங்கையும் கலந்துரையாடியுள்ளன. ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நோபூ கிஷி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் காணொலி தொலைத்தொடர்பில் இந்தக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.
கலந்துரையாடலில், இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.
அத்துடன் கடற்படை ஒத்துழைப்பு மற்றும் வான்வழி ஒத்துழைப்பு உள்ளிட்ட பரந்த அளவிலான பகுதிகளில் நிலையான முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.
இதேவேளை கிழக்கு மற்றும் தென் சீனக் கடல்களில் நிலைமையை மாற்றுவதற்கான ஒருதலைப்பட்ச முயற்சிகளுக்கு அமைச்சர் கிஷி கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)




கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு கொழும்புத்துறை மகா வித்தியாலயத்திலும் நேற்று நடைபெற்றது. குறித்த நிலையத்தில் ஜே / 61,ஜே /62, ஜே /63, ஜே /64 , ஜே /65 மற்றும் ஜே /66 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-20)

# ஸ்ரீ லங்கன் விமான சேவையின் வர்த்தகத் திட்டங்களை அறிவிக்குக

*அதன் தலைவருக்கு கோப் குழு பணிப்பு*

கொழும்பு, ஜூலை 8
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டு வரும் பூரண வர்த்தகத் திட்டமொன்றை தயாரித்து ஒரு மாத காலத்துக்குள் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத், ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் தலைவர் அஷோக் பத்திரகேக்கு உத்தரவிட்டுள்ளார்.
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு கூட்டப்பட்ட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.
"கொவிட் 19 தோற்று நோயின் தாக்கம், விமானங்களுக்கான எரிபொருள் செலவு, விமானங்களின் செயற்பாட்டு குத்தகைச் செலவுகள் மற்றும் ஏனைய குத்தகைச் செலவுகள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்ததுள்ளமை என்பன நிறுவனத்தின் வருமான இழப்பில் தாக்கம் செலுத்தியுள்ளன.
நிறுவனத்தின் சாதகமற்ற மூலதன நிலைமை 2021 மார்ச் 31ஆம் ஆகி திகதிவரை ஒரு தீவிர நிலையை அடைந்துள்ளது.
அதனால் திறைசேரியின் உதவியின்றி நிறுவனத்தின் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்ளது. இது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது" என்று தெரிவித்த கோப் குழுவின் தலைவர் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்ந்து ஒரு மாத காலத்துக்குள் அமைச்சு மட்டத்திலும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரைத்தார். அத்தோடு விசேட குழுவொன்றை நியமித்து பரந்துபட்ட ஆய்வொன்றை மேற்கொண்டு துரிதமாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ப)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக கடுமையான சட்டம்

*இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து*

**கொழும்பு,ஜூலை 8**
**சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக, கடுமையான சட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களிடமிருந்து, தேசத்தின் குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு முழுச் சமூகத்தின் பொறுப்பாகும்.
15 வயதுச் சிறுமியை இணையத்தளம் மூலம் தொடர்புபடுத்தி, துஷ்பிரயோகம் செய்த 30 க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாத சூழலை உருவாக்குவது அனைவரின் பொறுப்பாகும். தண்டனைச் சட்டத்தின் 360 ஆவது பிரிவின்படி, சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தூண்டும் எவரும் 10 வருடங்களுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்படலாம் அல்லது அபராதம் விதிக்கப்படலாம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். ஆனால் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான சட்டத்தை மேலும் கடுமையாக்க வேண்டும். கொவிட்-19 சிறுவர்களை இணையத்தை அணுகுவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது.
சில குழுக்கள் நுட்பமாக சிறுவர்களை பாலியல் மற்றும் உணர்ச்சி ரீதியாக துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்கின்றன. இது அவர்களின் எதிர்காலத்துக்கு தீங்கு விளைவிக்கும், மோசமான நிலையை உருவாக்கும்- என்றார். (ஒ,4)

# மாணவர்களுக்காக 20 அலைவரிசைகள்

கொழும்பு,ஜூலை 8
தரம் 1 முதல் 13 வரையான மாணவர்களுக்காக 20 தொலைக்காட்சி அலைவரிசைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இணை அமைச்சரவைப் பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.
பாடசாலை மாணவர்களுக்கு தொலைக்காட்சி மூலம் இலவசக் கல்வியை வழங்கவும், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அரசு உறுதிபூண்டுள்ளது.
உயர்தரத்தில் தொழில்நுட்பம், உயிரியல், கணிதம் மற்றும் கலை ஆகிய துறைகளுக்கு 4 தனித்தனி அலைவரிசைகள் நிறுவப்படும். அதற்கான பதிவு நடவடிக்கைகள் கல்வி அமைச்சில் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# சீனாவுக்காக நாணயம் வெளியீடு

கொழும்பு,ஜூலை 8
இலங்கை அரசுக்கும், சீன மக்கள் குடியரசுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, புதிய ஆயிரம் ரூபா நாணயத்தை இலங்கை வெளியிட்டுள்ளது.
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் அதனைக் கையளித்தார்.
இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பரஸ்பர உறவுகளுக்கான விசேட கௌரவமாக இந்த நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.




நாணயத்தின் ஒரு பக்கத்தில் இலங்கை மற்றும் சீனாவின் தேசிய கொடிகளுடன், தாமரைத் தடாகம், மஹிந்த ராஜபக்ச கலையரங்கின் முன்பக்கத் தோற்றம் ஆகியவை காட்சியளிக்கின்றன. கலையரங்குக்குக் கீழ் பெரிய இலக்கத்தில் 2022 என குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 'இலங்கை சீனா 65 ஆண்டுகள்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
நாணயத்தின் மறுபக்கத்தில் ஆயிரம் ரூபா மற்றும் 'சீன கம்யூனிஸ்ட் கட்சி என்று மும்மொழிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
500 தங்க நாணயங்களும், 2000 வெள்ளி நாணயங்களும் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: மற்றொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூலை 8

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைவாக, 32 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மாவனெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் இணையவழியாக ஆடை விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார். அவரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

### சகோதரிகளை துஷ்பிரயோகம்செய்த

# சிறிய தந்தைக்கு 90 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை

### 25 ஆண்டுகளின் பின்னர் தீர்ப்பு

**கொழும்பு, ஜூலை 8**

**அக்கா, தங்கையான 15 மற்றும் 12 வயதான சிறுமிகள் இருவரை, அவ்வப்போது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில், சிறுமிகளின் சிறிய தந்தைக்கு 90 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.**

பிரதிவாதியான சிறிய தந்தையின் மீது சுமத்தப்பட்டிருந்த சகல குற்றச்சாட்டுகளும், எவ்விதமான சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபணமாகியது. அதனையடுத்து சிறிய தந்தைக்கு 90 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அநுராதபுரம் இலக்கம் 2 மேல் நீதிமன்றத்தின் முன்னோடி நீதிபதியான பேராசிரியர் சுமுது பிரேமசந்திர, பிரதிவாதிக்கு கடூழிய சிறைத்தண்டனையை விதித்தார்.

பிரதிவாதிக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த ஆறு குற்றச்சாட்டுகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அனைத்துக் குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாக அவர், இனங்காணப்பட்டார். இதனையடுத்து 25 வருடங்களின் பின்னர், அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு குற்றச்சாட்டுக்கு 15 வருடங்கள் என்றடிப்படையில், ஆறு குற்றச்சாட்டுகளுக்கும் 90 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தண்டத்தை ஒரே தடவையில் செலுத்த வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

ஒரு குற்றச்சாட்டுக்கு 10 ஆயிரம் ரூபா என்றடிப்படையில், ஆறு குற்றச்சாட்டுகளுக்கும் 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின், மேலும் ஒரு வருடம் தளர்த்தப்பட்ட சிறைத்தண்டனைக்கு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மனுதாரர்களான சிறுமிகள் இருவருக்கும் 10 லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும், அந்த நஷ்டஈட்டை செலுத்தத் தவறின் மேலும் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனைக்கு உட்படுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

பிரதிவாதி, சமூகத்திலிருந்து நீதிமன்றத்துக்கு வந்திருந்தமையால், 14 நாள்கள் தனிமைப்படுத்தி, சிறைக்கு அனுப்புமாறு அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிபதி கட்டளையிட்டார். கல்கிரியாகம பிரதேசத்தைச் சேர்ந்தவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற போது, அந்த நபருக்கு 36 வயதாகும். வழக்கின் தீர்ப்பளிக்கப்பட்ட நாளில் அவர் 61 வயதை கடந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

## பாடசாலை மாணவர்களுக்கு புதிய பஸ் சேவைகள் ஒழுங்கு

கொழும்பு, ஜூலை 8

பாடசாலை மாணவர்களுக்காக, புதிய பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தரம் 5 க்கு கீழ் உள்ள வகுப்புக்களில் கற்கும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

மக்களுக்கு வசதியான போக்குவரத்துச் சேவையை வழங்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## உள்ளூராட்சி ஊழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜூலை 8

உள்ளூராட்சி மன்றங்களில் சாதாரண அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் விரைவில் வழங்கப்படும் என்று பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் சுமார் 8 ஆயிரம் ஊழியர்களின் நிரந்தர நியமனத்தை விரைவுபடுத்துமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைவாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான முன்மொழிவை முன்வைப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## 30 நாள்களுக்கு போதுமான பெற்றோலே கையிருப்பில்



கொழும்பு, ஜூலை 8

30 நாள்களுக்கு போதுமான அளவு பெற்றோல் கையிருப்பில் உள்ளது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டில் பெற்றோல் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று ஊடகங்கள் சிலவற்றில் வெளியாகியுள்ள செய்தி ஆதாரமற்றது. தற்போது பெற்றோல் கையிருப்பில் உள்ளது.

35 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலுடன் கப்பல் ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## சுவிஸ் அரசியலில் இலங்கை பெண்

கொழும்பு, ஜூலை 8

இலங்கையில் பிறந்த ஃபரா ரூமி என்பவர், சோலோதர்ன் மாநிலங்களவைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பின் பிஷப் கல்லூரியில் கல்வி கற்ற இவர், சுவிஸ் கன்டோனல் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இலங்கைப் பெண் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையில் பணியாற்றிய ஃபரா ரூமி, அரசியலில் ஒரு வெற்றிகரமான நிலைக்குச் சென்றுள்ளார். (ஒ.4)

## மகனின் கொலைக்கு உரிய நீதி வேண்டும்

மட்டக்களப்பு, ஜூலை 8

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் வீட்டின் முன்னால் அவரது மெய்ப்பாதுகாவலரால் படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரனின் கொலைக்கு நீதி வேண்டும் என்று அவரின் தாயார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்காக நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் முன்னிலையான உயிரிழந்தவரின் தாயார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

"எனது மகனுக்கு என்ன நடந்தது எதனால் பிரச்சினை வந்தது. எனது பிள்ளைக்கு நீதி கிடைக்கவேண்டும்.




அதுமட்டும்தான் எனக்கு வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மாதம் 2ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி, 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவர் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக மெய்ப்பாதுகாவலர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த மெய்ப் பாதுகாவலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து, அவரை நீதிமன்றுக்கு அழைத்து வரமுடியாத நிலையில் வழக்கு விசாரணை எதிர்வரும் [illegible] 9ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீட்டுத் திட்ட பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தாத அலுவலகங்கள்




## அலட்சியப்போக்குடன் அதிகாரிகள்

## கண்டுகொள்ளாத மாவட்ட நிர்வாகம்

■ தி.ராஜ், சங்கேதன், கதிர்

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்குரிய பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. சில பிரதேச செயலர் பிரிவுகளில் வீடுகளுக்கான அடிக்கல்லும் நடுகை செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பயனாளிகள் தெரிவில் உள்ளூர் அரசியல்வாதி தலையீடுசெய்திருந்தார். தகுதியான பயனாளிகளை புறம் ஒதுக்கி தனது ஆதரவாளர்களை பயனாளிகள் தெரிவில் உட்புகுத்தியிருந்தார். இந்த விவகாரம் பகிரங்கப்படுத்தப்பட்டு அரசியல்வாதியும் அதிகாரிகளும் சேர்ந்து மேற்கொண்ட 'தில்லுமுல்லு' அம்பலமானது. இதனையடுத்து பிரதமர் அலுவலகத்தின் இணைப்பாளரான கீதநாத் நேரடியாக இதனை ஆராய்ந்தார். 'தில்லுமுல்லு' உறுதிப்படுத்தப்பட்டதால், வீட்டுத் திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலை பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்கள், கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்துமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் கடந்த 3ஆம் திகதி சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் 06.07.2021 அன்று தொடக்கம் 12.07.2021 ஆம் திகதி வரையில் மேற்படி இடங்களில் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

'உதயனின்' நேரடி களத்தரிசிப்பில் சிக்கிய சம்பவங்கள்

### சண்டிலிப்பாய் 06.07.2021 காலை 11.04

பயனாளிகள் பட்டியல் ஒட்டப்பட்டுள்ளதா என்பதை நேரடியாகக் கண்காணிக்க உதயன் செய்தியாளர் குழு களமிறங்கியது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் பயனாளிகள் பட்டியல் ஒட்டப்பட்டிருக்கவேண்டும் என்ற நிலையில், எமது செய்தியாளர் குழு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு காலை 10.40 மணிக்குச் சென்றது.

பிரதேச செயலகத்தில் வரவேற்பு பகுதியில் நின்ற அலுவலரிடம் 'உதயன் செய்தியாளர் குழு' தம்மை ஊடகர்கள் என்பதை வெளிப்படுத்தாது, வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியல் எங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வினவியது. அதற்கு அந்த அலுவலர், அது கிராம அலுவலர் அலுவலகங்களில்தான் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்று பதிலளித்தார். இதன் பின்னர் எமது செய்தியாளர் குழு தம்மை ஊடகவியலாளர்கள் என்று அறிமுகப்படுத்திய பின்னர், தனக்கு இது தொடர்பில் தெரியாது. அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரைக் கேளுங்கள் என்று இன்னொருவரைக் கை காண்பித்து விட்டார்.

அவரிடம் பயனாளிகள் பட்டியல் எங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்று கேட்டபோது, இங்க ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே அறிவித்தல் பலகை உள்ளது. இது திட்டமிடல் பிரிவுடன் சம்பந்தப்பட்டது என்பதால் அவர்களிடம் கேட்டுச் சொல்கின்றேன் என்று கூறிவிட்டு, பொதுமக்கள் பயனாளிகள் பட்டியல் எங்கே என்று கேட்கின்றனர் என அலைபேசியில் வினவினார். அதற்கு மறுமுனையில் தெரிவித்த பதிலை அலுவலர் கூறினார். பிரதேச செயலர் இல்லை. அவர் வந்ததும் கையெழுத்து வாங்கிய பின்னர்தான் ஒட்டுவார்கள் என்று குறிப்பிட்டார். அந்த அலுவலரிடம், எமது செய்தியாளர் குழு தம்மை ஊடகவியலாளர்கள் என்று தெரியப்படுத்தியதும், சம்பந்தப்பட்ட திட்டமிடல் பிரிவில் இருந்து அலுவலர் ஒருவர் அவசரமாக வந்தார். ஒட்டப்படவுள்ள பயனாளிகள் பட்டியலின் மாதிரியைக் காண்பித்தார். இதில் பிரதேச செயலரிடம் கையெழுத்து வாங்கவேண்டும். அவர் இல்லை. உதவிப் பிரதேச செயலரிடம் கையெழுத்து வாங்கி சிறிது நேரத்தில் ஒட்டுவோம் - என்றார்.





### அச்சுவேலி வடக்கு 06.07.2021 காலை 11.53

அங்கிருந்து புறப்பட்டு அச்சுவேலி வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தை எமது செய்தியாளர் குழு சென்றடைந்தது. அறிவித்தல் பலகையில் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அங்கு கடமையிலிருந்த கிராம அலுவலரிடம், வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியல் எங்கே என்று கேட்டதும், தான் கடமைக்கு வந்து ஒரு மாதம் ஆகின்றது எனவும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரே அதற்குப் பொறுப்பு. அவர் கோப்பாய் பிரதேச செயலக கூட்டத்தில் இருக்கின்றார். கூட்டம் முடிந்து வந்ததும் பட்டியலை ஒட்டுவார் என்று பதிலளித்தார்.

### கரவெட்டி பிரதேச செயலகம் 06.07.2021 மதியம் 12.54

கரவெட்டி பிரதேச செயலகத்தின் வரவேற்புப் பகுதியில் இருந்தவர்களிடம் பயனாளிகள் பட்டியல் எங்கே ஒட்டப்பட்டுள்ளது என்று கேட்டபோது, அங்கிருந்த அறிவித்தல் பலகை ஒன்றைக் காட்டினார். அங்கு சேதனப்பசளை தொடர்பான அறிவித்தல் ஒன்றே காணப்பட்டது. பயனாளிகள் பட்டியல் காணப்படவில்லை. ஊடகவியலாளர்கள் என்று அறிமுகப்படுத்தி மீளவும் கேட்டபோது, திட்டமிடல் கிளையுடன் தொடர்புகொண்டு, பிரதேச செயலர் இப்போதுதான் வந்துள்ளார். இன்னும் அரை மணி நேரத்தில் ஒட்டப்படும் என்று பதிலளித்தனர்.

### அல்வாய் கிழக்கு


இதன் பின்னர் எமது செய்தியாளர் குழு அல்வாய் கிழக்கு கிராம அலுவலரின் அலுவலகத்துக்குச் சென்றது. அங்கு கடமையிலிருந்த கிராம அலுவலரிடம் பயனாளிகள் பட்டியல் எங்கே என்று கேட்டபோது, அறிவித்தல் பலகையில் ஒட்டப்பட்டிருந்தது. அது கிழிக்கப்பட்டு விட்டது என்று பதில்ளித்தார். அந்த அலுவலகத்தில் கடமையிலிருந்து வேறு அலுவலர்கள், அது பழைய பட்டியல். புதிய பட்டியல் இப்போது தயாரிக்கப்படுகின்றது என்று கூற, கிராம அலுவலர் அலைபேசியில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருடன் உரையாடி விட்டுப் பதிலளித்தார். பிரதேச செயலகக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் நிற்பதாகவும் அவர் வந்து பயனாளிகள் பட்டியலை ஒட்டுவார் என்றும் கூறினார்.

### மூடப்பட்டிருந்த அலுவலகங்கள் 06.07.2021

அத்தாய் கிழக்கு, துன்னாலை மத்தி, துன்னாலை கிழக்கு, அல்வாய் ஆகிய கிராம அலுவலர் அலுவலகங்களுக்குச் சென்றபோது [illegible] அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. இந்த அலுவலகங்களுக்கு எமது செய்தியாளர் குழு மதியம் 1.30 இலிருந்து 2.30 இக்கு இடைப்பட்ட நேரத்தில் சென்றது. கரவெட்டி தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் பயனாளிகள் பட்டியல் ஒட்டப்பட்டிருந்தது.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






**பருத்தித்துறை பிரதேச செயலகம்**
**06.07.2021 மாலை 2.45**

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு எமது செய்தியாளர் குழு சென்றபோது வரவேற்பாளர்களிடம் பயனாளிகள் பட்டியல் எங்கே ஒட்டப்பட்டுள்ளது என்பதை வினவினர். அது தொடர்பில் திட்டமிடல் பிரிவினரே கூற முடியும் என்று திட்டமிடல் பிரிவின் அலுவலர் ஒருவரை அழைத்தனர். பிரதேச செயலர் இப்போதுதான் கூட்டம் முடிந்து வந்துள்ளார். பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. பிரதேச செயலரின் கையெழுத்தைப்பெற்று பட்டியலை ஒட்டுவோம் என்று பதிலளித்தார். அவரிடம் அறிவித்தல் பலகை எங்கே உள்ளது? அதனை ஒளிப்படம் எடுக்கவேண்டும். பிரதேச செயலரின் அனுமதியைப் பெற்றாலே படம் எடுக்கலாம் என்று வரவேற்பாளர்கள் கூறுகின்றனர். பிரதேச செயலரிடம் அனுமதியைப் பெற்றுத் தாருங்கள் என்று திட்டமிடல் பிரிவின் அலுவலரிடம் எமது செய்தியாளர் குழு கேட்டது. சிறிது நேரத்தில், பயனாளிகள் பட்டியல் ஒட்டிய பின்னரே ஒளிப்படம் எடுக்க அனுமதிக்கலாம் என்று அந்த அலுவலரிடமிருந்து பதில் கிடைக்கப்பெற்றது.

**கரவெட்டி பிரதேச செயலம்**
**06.07.2021 மாலை 3.30**

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு மீண்டும் வந்து பார்வையிட்ட போதும் பயனாளிகள் பட்டியல் ஒட்டப்பட்டிருக்கவில்லை. வரவேற்புப் பகுதியில் முன்னர் இருந்தவர்கள் இப்போது இருக்கவில்லை. வேறு அலுவலர்களே அமர்ந்திருந்தனர். அவர்களிடம் பயனாளிகள் பட்டியல் எங்கே ஒட்டப்பட்டுள்ளது என்று எமது செய்தியாளர்கள் கேட்டனர். அது கிராம அலுவலர் அலுவலகங்களில்தான் ஒட்டப்படும். இங்கு ஒட்டப்படாது என்று வரவேற்பாளர்கள் பதிலளித்தனர். அதன் பின்னர் எமது செய்தியாளர் குழு, தம்மை ஊடகவியலாளர்கள் என்று அறிமுகப்படுத்தி மாட்டச் செயலர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பிய கடிதத்தையும் காண்பித்தது.

உடனடியாக திட்டமிடல் பிரிவுடன் தொடர்புகொண்டு அங்கிருந்து ஓர் அலுவலரை வரவழைத்தனர். அந்த அலுவலர் எமது செய்தியாளர்களை உதவித் திட்டமிடல் பணிப்பாளரின் அறைக்கு அழைத்துச்சென்றார்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எமது செய்தியாளர் குழுவிடம், ஏ 4 தாளில் பட்டியல் தயாரித்திருந்தோம். அதனை ஏ 3 தாளுக்கு மாற்றி பிரிண்ட் எடுப்பதில் தாமதமாகி விட்டது என்று கூறினார். அங்கிருந்த மற்றொரு அலுவலர், பட்டியல் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்க்க தாமதமாகிவிட்டது என்று குறிப்பிட்டார். எமது செய்தியாளர் குழு அங்கு இருக்கதக்கதாக்வே பட்டியல் தயாரிக்கப்பட்டு அறிவித்தல் பலகையில் ஒட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன்போது பிரதேச செயலரின் கையெழுத்துப் பெறப்படவேண்டும் என்று அலுவலர் ஒருவர் கூற, பட்டியல் ஒட்டிய பின்னர் பிரதேச செயலர் கையெழுத்து வைப்பார் என்று உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கூறிக்கொண்டு, எமது செய்தியாளர் குழுவை அறிவித்தல் பலகை உள்ள இடத்துக்குச் செல்லுமாறு கூறினார். சில நிமிடங்களிலேயே அறிவித்தல் பலகையில் பயனாளிகள் பட்டியல் ஒட்டப்பட்டது.

**சங்கானை பிரதேச செயலகம்**
**07.07.2021 காலை 11.35**

பிரதேச செயலகத்திலோ, பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவிலோ பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை. சுற்றறிக்கை நேற்றைய தினம் 07.07.2021 கிடைத்தது எனவும் மாலைக்குள் காட்சிப்படுத்தப்படும். தாமதமாக காட்சிப்படுத்துவதற்கு ஏற்றால் போல் முடிவுத் திகதியும் நீடிக்கப்படும் என்றும் பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் எமது செய்தியாளர் குழுவுக்குத் தெரிவித்தார்.


**சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்**
**07.07.2021 காலை 11.59**

பிரதேச செயலகத்தில் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் 17 பயனாளிகள் கொண்ட பட்டியலாக அதனைத் தயாரித்து ஒன்றன் பின் ஒன்றாக அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தியுள்ளார்கள். அதனால் முதலாவது தாளில் உள்ள பட்டியலை மாத்திரமே பொதுமக்கள் பார்த்துவிட்டுச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. மாவட்டச் செயலர் அறிவித்தவாறு காட்சிப்படுத்தவில்லை.

**உடுவில் பிரதேச செயலகம்**
**07.07.2021 மதியம் 01.43**

பிரதேச செயலகத்தில் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதனை ஒளிப்படம் எடுக்க முயன்றபோது அனுமதி வழங்கப்படவில்லை. பிரதேச செயலக நிர்வாக அலுவலர், ஒளிப்படம் எடுப்பதாக இருந்தால் கோரிக்கை கடிதம் வழங்குமாறு எமது செய்தியாளரிடம் கோரினார். அதற்கு அமைவாக கோரிக்கை கடிதம் செய்தியாளரால் வழங்கப்பட்டது. அதன் பின்னர் பிரதேச செயலருடன் தொலைபேசியில் உரையாடினார். பின்னர் திட்டமிடல் கிளையுடன் தொடர்புகொண்டு பட்டியலின் மூலப் பிரதியைக் கொண்டுவருமாறு கூறினார்.

அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலுடன், மூலப்பட்டியலையும் ஒப்பீடுசெய்யவேண்டும். அதனை ஒப்பீடு செய்த பின்னர் ஒளிப்படம் எடுக்க அனுமதிக்கலாம் என்று செய்தியாளரிடம் கூறினார். சிறிது நேரத்தின் பின்னர் ஒளிப்படம் எடுக்க அனுமதிக்கப்பட்டது. அறிவித்தல் பலகையில் காட்சிப்ப டுத்தப்பட்ட பயனாளி தெரிவுக்கான அறிவுறுத்தல்தான் மாறி இருந் தது எனவும் அதுவே சீர் செய்யப்பட்டுள்ளது எனவும், பயனாளிகள் பட்டியலில் ஒரு மாற்றமும் இல்லை என்றும் தெரிவித்தார் நிர்வாக அலுவலர்.



**தெல்லிப்பழை பிரதேச செயலகம்**
**07.07.2021 மதியம் 2.00**

பிரதேச செயலகத்தில் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் பிரதேச செயலர், கிராம அலுவலர் அலுவலகங்களில் காட்சிப்படுத்த பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். அத்துடன் பிரதேச செயலகத்தில் பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை தொடர்பில் தொடர்புடைய அலுவலரை கடுமையாகச் சாடினார்.

**தெல்லிப்பழை கிழக்கு**
**07.07.2021 மதியம் 2.10**

தெல்லிப்பழை கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் பயனாளிகள் பட்டியல் ஒட்டப்படவில்லை. அங்கு கடமையிலிருந்த கிராம அலுவலர், வீட்டுத் திட்டம் தொடர்பான புதிய பட்டியல்கள் எவையும் பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

எமது செய்தியாளர் குழு கடந்த இரண்டு நாள்களில் எழுமாற்றாகச் சென்று களத் தரிசிப்புக்களை மேற்கொண்ட போது இடம்பெற்ற சம்பவங்களே இவை. ஏனைய பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களையும் இவ்வாறு திடீர் களத்தரிசிப்பு செய்து அதனையும் உதயன் வெளிக்கொணர்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆர்ப்பாட்டத்தை நடத்த முயற்சி

## அறுவர் கைது

கொழும்பு.ஜூலை 8

எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க முயன்ற குற்றச்சாட்டில் முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ உட்பட 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு ராமநாயக்க மாவத்தைப் பகுதியில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது.

எனினும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவில்லை. சம்பவ இடத்தில் கூடியிருந்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய பொதுக்கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றை நடத்த இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே இவற்றில் ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)



# 114 பேருக்கு நேற்று தனிமை நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 8


வசாவிளான் இடைத்தங்கல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிநாடுகளிலிருந்து வருகைதந்த இலங்கையர்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்து நேற்று தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கட்டார், சவூதி அரேபியா, ஓமான், டுபாய், மறறும் லெபனான் ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்த 114 பேரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பதுளை, இரத்தினபுரி, கதிர்காமம், கொழும்பு மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தலைமையகம் தெரிவித்தது. (ப)




# டெல்டா மாறுபாடுடைய வைரஸால் இரண்டு வாரங்களில் பெரும் ஆபத்து

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு.ஜூலை 8**

**இலங்கையில் டெல்டா மாறுபாடுடைய வைரஸால், இன்னும் இரண்டு வாரங்களில் பெரும் ஆபத்து ஏற்படும் என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் பத்மா குணரத்ன தெரிவிக்கையில்,

இலங்கையில் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் ஆயிரக்கணக்கானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மாறுபாடுடைய வைரஸ் தொற்றியவர்களில் 5 வீதமானோர் ஆபத்தான நிலைக்குள்ளாகக் கூடும். 2 வீதமானோர் உயிரிழக்கக்கூடும். இன்னும் இரண்டு வாரங்களில் இந்த நிலைமை அதிகரிக்கக்கூடும். மக்கள் அவதானமின்றிச் செயற்பட்டால் இந்தியாவுக்கு நேர்ந்த நிலைமை இலங்கைக்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை- என்றார். (ஒ.4)

# 32 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு.ஜூலை 8

நாட்டில் இதுவரை 32 லட்சத்து 44 ஆயிரத்து 417 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நேற்றுமுன்தினம் மட்டும் 1 லட்சத்து 40 ஆயிரத்து 41 பேருக்கு சீனாவின் சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டது.

அதேவேளை, இதுவரை 3 லட்சத்து 84 ஆயிரத்து 294 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும், 1 லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ.4)




# இரு பகுதிகள் விடுவிப்பு

கொழும்பு.ஜூலை 8

திருகோணமலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரண்டு பகுதிகள் நேற்றுக் காலையுடன் விடுவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக நுவரெலியா, கொத்மலை டன்சினன் கிராம சேவகர் பிரிவு மற்றும் திருகோணமலை நாகராஜவலவ்வ கிராம சேவகர் பிரிவு ஆகிவை விடுவிக்கப்பட்டுள்ளன. (ஒ.4)

## அனுமதி கிடைத்தால்

# 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்குத் தயார்




கொழும்பு.ஜூலை 8

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடுத்த சில வாரங்களில் கொரோனாத் தடுப்பூசிகளை செலுத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக்கான தேசிய ஆலோசனைக் குழுவின் அனுமதி கிடைத்தால், 20 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போது நாடு முழுவதும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுகின்றது. 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேல் மாகாணத்தில் தடுப்பூசி செலுத்தப்படுகின்றது.

தடுப்பூசிகள் தொடர்ந்து நாட்டுக்குக் கிடைப்பதால், 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடுத்த சில வாரங்களில் தடுப்பூசி செலுத்தப்படும். என்றார். (ஒ.4)

# ஆசிரியர்களுக்கு திங்கள் தடுப்பூசி

கொழும்பு.ஜூலை 8

நாடளாவிய ரீதியில் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னரே, பாடசாலைகளை மீள ஆரம்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

அதனடிப் படையில் சுமார் 2 லட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் நாடு முழுவதிலும் கடமையில் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் விரைவுபடுத்தி தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# தடையை மீறிப் பயணம்: 76 பேருக்கு நேர்ந்த கதி

கொழும்பு.ஜூலை 8

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை மீறி, பயணிக்க முற்பட்ட 76 பேர் நேற்று திருப்பி அனுப்பப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் 339 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதே குற்றச்சாட்டுக்களில் இதுவரை 48 ஆயிரத்து 244 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 41 ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு எதிராக வழக்கு மேற்கொள்ளப்படும்.

மேல் மாகாணத்தில் உள்வரும், வெளியேறும் 14 நுழைவாயில்களில், வாகனங்கள் பரிசோதிக்கப்படுகின்றன. இதன்போது நேற்று மட்டும் 76 பேர் திரும்பி அனுப்பப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# அரச நிறுவனங்கள் அடுத்த வாரம் வழமைக்கு?

கொழும்பு.ஜூலை 8

அரசு நிறுவனங்களின் செயற்பாடுகள் அடுத்த வாரம் முதல் வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத்தின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசி செயல்முறை மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனால் அரச சேவைகள் அடுத்த வாரம் முதல் வழமை போன்று மீண்டும் தொடங்க வாய்ப்புள்ளது.

எனினும் கடந்த மாதம் வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின்படியே அரச ஊழியர்கள் தற்போதும் செயற்பட வேண்டும்.

பொது நிறுவனங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச ஊழியர்களை மட்டுமே நிறுவனத் தலைவர்கள் அழைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி கட்டாயம்

கொழும்பு.ஜூலை 8

மேல் மாகாணத்தில் அனைத்துக் கர்ப்பிணிகளும் கொரோனாத் தடுப்பூசியை செலுத்த வேண்டும் என்று இலங்கை மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவக் கல்லூரி அறிவுறுத்தியுள்ளது.

உயர் குருதி அழுத்தம், நீரிழிவு நோய், தொழில்புரிபவர்கள் மற்றும் அதிக ஆபத்து நிறைந்த தொழில்களில் ஈடுபடும் கர்ப்பிணிகள் கொரோனாத் தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கல்லூரி அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக முன்னதாக 12 கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களுக்குப் பயந்து ஆப்கான் ராணுவம் ஓட்டம்

## தஜிகிஸ்தானுக்குள் தஞ்சமடைந்தனர்

**காபூல், ஜுலை 8**

**ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதை அடுத்து தலிபான்களின் தாக்குதல் அங்கு தீவிரம் பெற்றுள்ளது. தலிபான்களுக்குப் பயந்து ஆப்கானிஸ்தானின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் அயல் நாடான தஜிகிஸ்தானுக்குள் தஞ்சமைந்துள்ளனர்.**



### நடந்தது என்ன?

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களும் இராணுவத் தலைமையகமான பென்டகனும் அல் குவைதா பயங்கரவாத அமைப்பால் தாக்கப்பட்டன. இதில் பலர் கொல்லப்பட்டனர். பல பில்லியன் டொலர்கள் பொருளாதார இழப்பை அமெரிக்கா சந்தித்தது. இந்தத் தாக்குதலின் பின்னர் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை என்பதை ஆரம்பித்தது.

இதன் ஒரு பகுதியாக அல் குவைதா அமைப்புக்கு தலிபான்கள்தான் ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் கொடுத்துப் பாதுகாக்கின்றனர் என்று குற்றஞ் சாட்டி தலிபான்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டது. 2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்த அமெரிக்கா தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றியதுடன் அஸ்ரப் கனி தரப்பினரை ஆட்சியமைக்க உதவியது. இதன் பின்னர் கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை எடுத்தபோதிலும் அந்த அமைப்பை அழிக்கவோ அல்லது பலம் குன்ற வைக்கவோ முடியவில்லை. 2000 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தப் போரில் அமெரிக்கா இழந்துள்ளது. 2,500 சிப்பாய்களைப் பறிகொடுத்துள்ளது. எனினும் எந்தப் பயனும் இல்லாமல் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா முழுவதுமாக வெளியேறியுள்ளது.



### பலம் இழந்துள்ள ஆப்கான் இராணுவம்

அமெரிக்காவின் வெளியேற்றம் ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் பலத்தை இழக்கச் செய்யும். இதனால் தலிபான்களின் தாக்குதல் அதிகரிக்கும். இதன் விளைவாக மிக விரைவிலேயே தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைக்க வாய்ப்புள்ளது என்று ஏற்கனவே தன்னார்வ அமைப்புக்கள் எச்சரித்த நிலையில் அதன்படியே தலிபான்கள் ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களை தற்போது துரிதப்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானின் அயல் நாடான தஜிகிஸ்தானுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். இதை தஜிகிஸ்தானின் எல்லைப் பாதுகாப்புப் படை உறுதிப் படுத்தியுள்ளது. (ம)



## மேலும் 140 மாணவிகளை கடத்தியது பொகோஹறம்!

நைஜர், ஜுலை 8

நைஜீரியாவில் பல நூறு மாணவிகள் அந்த நாட்டில் செயற்படும் பொகோ ஹறம் ஆயுதக் குழுவால் கடத்தப்பட்டுள்ள நிலையில் மேலும் 140 மாணவிகள் நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹாரம் உள்பட பல்வேறு பயங்கரவாத குழுக்கள் கடும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவர்கள் கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்ததோடு பள்ளிக்கூடங்கள் மீது தாக்குதல் நடத்தி மாணவ, மாணவிகளை கடத்தி செல்வதை வழக்கமாக கொண்டுள்ளன.

அதிலும் குறிப்பாக, அண்மை காலமாக பள்ளி மாணவ, மாணவிகள் கடத்தப்படும் சம்பவம் அடிக்கடி நிகழ்கின்றது.

இந்த நிலையில், நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள கதுனா மாகாணத்தின் தலைநகர் கதுனா சிட்டியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளிக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த ஆயுதக்குழு அங்கு கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 140 மாணவிகளைக் கடத்திச் சென்றுள்ளது என்று நைஜீரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## பக்தாத் அமெரிக்கத் தூதரகத்தை வெடிகுண்டுடன் நெருங்கிய ட்ரோன்

### அமெ. சிப்பாய்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது

பக்தாத், ஜுலை 8



ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ட்ரோன் ஒன்று நெருங்கியுள்ளது என்றும் பின்னர் அது அமெரிக்கச் சிப்பாய்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் ஈரான் ராணுவத் தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டார். அதன் பின்னர் ஈரானும், ஈரானின் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்களும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்களையும் தூதரகங்களையும் இலக்கு வைத்து வருகின்றன.

இத்தகையதொரு பின்னணியில்தான் ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு இந்த வெடிகுண்டு ட்ரோன் அனுப்பப் பட்டுள்ளது. எனினும் அமெரிக்க தூதரகத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள வான் பாதுகாப்பு அமைப்பு அபாய ஒலியை எழுப்பி இதுகுறித்து எச்சரித்தது.

அதனை தொடர்ந்து தூதரகத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கச் சிப்பாய்கள் உடனடியாக அந்த ட்ரோனை சுட்டு வீழ்த்தினர். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. (ம)

## தனிமையில் கேட்!

லண்டன், ஜுலை 8

தான் சமீபத்தில் சந்தித்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டன் இளவரசி கேட் மிடில்டன் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.

இதுகுறித்து கென்சிங்டன் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில், 'பிரிட்டன் இளவரசி கேட் மிடில்டன் சமீபத்தில் ஒருவரைச் சந்தித்தார். அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இளவரசி கேட் மற்றும் இளவரசர் வில்லியம்ஸ் இருவரும் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர். அவர்கள் இருவருக்கும் கொரோனாவுக்கான அறிகுறிகள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் அரசின் நெறிமுறைகளை அவர்கள் பின்பற்றியுள்ளனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிப்பதற்கான நாடகமே காணாமற்போனோர் அலுவலகம்

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 8**

**பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச அழுத்தங்களில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக செய்யப்பட்ட ஒரு அலங்காரமே இந்த காணமற்போனோரைக் கண்டறிவதற்கான அலுவலகம். இந்த அலுவலகத்தின் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு பொறுப்புக்கூறலில் இம்மியளவும் முன்னேற்றத்தைக் காட்டாது ஆறு வருடங்களை கடந்த அரசு கடத்த முடிந்தமை இதற்கு ஒரு உதாரணமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் நாடாளுமன்றில் தெரிவிக்கையில்;

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத் தின் விளைவாக காணமற்போனோரைக் கண்டறிவதற்கான பணியகமும், இழப்பீடுகள் வழங்குவதற்கான பணியகமும் அமைக்கப்பட்டன. இத் தீர்மானமானது முன்னைய அரசின் உடன்பாட்டுடனேயே கொண்டுவரப்பட்டது இந்த 30/1 தீர்மானத்துக்கு உடன்பட்டதை துரோகத்தனமான நகர்வு என தற்போதைய அரசு கடுமையாக விமர்சித்துவருகின்ற அதே சமயம், மறுபுறத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்களில் தொடர்ச்சியாக பங்கெடுத்துவருகின்ற நாங்கள், மேற்படி தீர்மானமானது பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் துரோகமிழைத்துள்ளதாகவே கருதுகிறோம். ஒரு நாட்டின் பெயர் குறித்த தீர்மா னமானது, அந்நாட்டில் பெரும் குற்றச்செயல்கள் நடைபெற்றுள்ளதை ஏற்றுக்கொண்டு அவற்றுக்குப் பொறுப்புகூறலை உறுதிப்படுத்துதற்காகவே கொண்டுவரப்படுகிறது. உண்மையான அர்த்தத்தில், முன்னைய அரசானது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக, பொறுப்புக் கூறவைப்பதற்கான நெருக்குவாரத்திலிருந்து சிறிலங்காவைக் காப்பாற்றியிருக்கிறது. பிரதான பிரச்சினைகளைத் திசைதிருப்பி, முக்கியத்துவமில்லாத உதிரியான விடயங்களை சொல்லளவில் மேற்கொள்ளுவதன் மூலம், பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது என்பதனைக் காட்டுவதற்காகவே இவற்றை முன்னைய அரசு செய்தது. அவற்றில் ஒன்றுதான் இந்த காணாமற்போனோரைக் கண்டுபிடிப்பதற்கான பணியகம். இதுவிடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும், ஐ.நா. கட்டமைப்பிலும் ஒரு செயன்முறை இருக்கிறது. அதாவது, பொறுப்புக் கூறல் தொடர்பில் எவ்விதமான முடிவுகள் எடுக்கப்படினும் அவை பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியவையாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் இச் செயன்முறையில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களால் பலபரிந்துரைகள் முன்னைய அரசுக்கு வழங்கப்பட்டன. ஆனால் இப் பணியகத்தை அமைக்கும் போது அவை எவற்றையும் முன்னைய அரசு கருத்தில் எடுக்கவில்லை - என்றார். (ப)

# பழி தீர்ப்பதற்கானதே பங்கரவாதத் தடைச்சட்டம்

## கிண்ணியா நகர சபை உறுப்பினர் தெரிவிப்பு

திருமலை, ஜூலை 8



ஜனநாயகத்தக்கு அச்சுறுத்தலான பயங்கரவாதத் தடைச்சட்டம், இலங்கையில் பழிதீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும், கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஒன்றில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலகிலே எந்த நாட்டிலும் இல்லாத மிகக் கடினமான பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலான இச் சட்டத்தை வைத்து மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் தங்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும் அவர்களுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலை விமர்சிப்பவர்களையும் அவர்களுடைய அரசியல் கொள்கைகளை எதிர்ப்பவர்களையும் முடக்குவதற்கும், தண்டிப்பதற்கும், பழிவாங்குவற்கும் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். இது ஜனநாயகம், சட்டவாட்சி, நீதித்துறையின் சுயாதீனம் அகிய அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்றது.

கைதுசெய்யப்படுகின்ற சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருப்பதோடு மேலும் தேவையேற்படின் மீண்டும் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனு மதியையும் இந்த தடைச்சட்டம் வழங்குகின்றது. ஆனால் இப் பயங்கரவாத தடைச்சட்டம் உண்மையாகவே பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாக்குபவர்களை அல்லது அவர்களுக்கு துணையாக இருப்பவர்களை, நிதி அனுசரணை வழங்குபவர்களைத் தண்டிப்பதற்காகவும், நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையான பயங்கரவாதிகள், உண்மையான குற்றவாளிகள் வெளியில் நடமாடுகின்றபோது அப்பாவிகளும் அரசியல் எதிர்க்கருத்துடையவர்களும் கைது செய்யப்பட்டு மிக நீண்ட நாள்களாக சிறையில் அடைக்கப்படுகின்றனர். எனவே இவ்வாறான கடினமான ஜனநாயகத்துக்கு சவாலான சட்டங்கள் இல்லாமல் செய்யப்படுவதோடு உலக நாடுகளின் ஜனநாயக ரீதியான வரையறைக்குள் சிறுபான்மை சமூகமும் எதிர் அரசியல் கொள்கை உடையவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார். (ப)

# அரசின் வாக்குறுதிகளை நம்பிய மக்களுக்கே பெரும் ஏமாற்றம்

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 8



ஆட்சியைக் கைப்பற்றுவற்காக மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, தற்போதைய அரசு மக்களை ஏமாற்றியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை, 19 ஆவது அரசமைப்பை திருத்தி 20 ஆவது திருத்தம் என்று தமது தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு மாத்திரமே அரசு தீர்வு கண்டுள்ளது.


நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பெரும் அச்சுறுத்தல் நிலையொன்று உருவாகியுள்ளது. சுகாதாரத்துறையினருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆனால் அரசு இவற்றையெல்லாம் முழுமையாக அரசியல் மயப்படுத்தியுள்ளது.

அரசின் இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சுகாதாரப் பணியாளர்கள் மாத்திரமன்றி நாட்டு மக்களின் பொதுவான பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படவில்லை.

அனைத்துத் துறைகளிலும் அரசு கண்டிருக்கும் தோல்வியானது மக்கள்மீதே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உள்நாட்டு விவசாயம் பெரும் நெருக்கடிக்கும், வீழ்ச்சிக்கும் முகங்கொடுத்துள்ளது.

நாட்டின் முக்கிய வளங்களை சீனாவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மருத்துவ நிபுணர்கள் தொடர்ச்சியாக எச்சரித்து வரும் டெல்டா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் எவை? நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வரும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சீரமைப்பதற்கு அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் எவை? - என்றார். (ஒ.4)



# மாணிக்கக்கல் அகழ்வில் சீனர்?

## சந்தேகம் வெளியிட்டது ஐ.ம.சக்தி

கொழும்பு,ஜூலை 8

இலங்கை சீனர்களைக் கொண்டு, மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வருண லியனகே தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம வாவி சுத்திகரிப்புப் பணிகளில் சீன இராணுவத்தின் சீருடையை ஒத்த சீருடையணிந்த குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அண்மையில் சர்ச்சைகள் வெடித்திருந்தன. இந்தத் தகவலை மேற்கோள் காட்டி அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாவி சுத்திகரிப்பு பணிகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், சீனர்களைக் கொண்டு மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறுகின்றதா என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

திஸ்ஸமஹாராம வாவியை சுத்திகரிப்பதற்கு வேற்று நாட்டவர்களைக் கொண்டுவரத் தேவையில்லை. இரத்தினபுரி மாவட்டத்தில் பெருமளவான மாணிக்கக்கல் வியாபாரிகள் இருக்கின்றனர். தேவையேற்படும் பட்சத்தில் வாவியின் சுத்திகரிப்பு பணிகளுக்கு அவர்கள் உதவிகளை வழங்குவார்கள்.

எனவே இப்போது வாவி சுத்திகரிப்பு என்ற பெயரில் இடம்பெறும் நடவடிக்கைகள் அங்கு மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறக்கூடும் என்ற சந்தேகத்தையே இரத்தினபுரி மாவட்ட மக்கள் மத்தியிலும் தோற்றுவித்துள்ளது.

பொய்களைக் கூறி நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை தற்போதைய அரசு எமது நாட்டிலுள்ள வர்த்தகர்களுக்கும், பிறநாடுகளிலுள்ள வர்த்தகர்களுக்கும், எமது நாட்டில் இருந்துகொண்டு பிறநாடுகளில் முதலீடு செய்பவர்களுக்கும் அவசியமான வசதி வாய்ப்புக்களையும், சலுகைகளையும் வழங்குகின்றதே தவிர, உள்நாட்டு விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இறையாண்மையை பாதித்தால் இலங்கையும் எதிரியான நாடே

இந்திய முன்னாள் இராணுவ அதிகாரி



**கொழும்பு,ஜூலை 8**
**இந்தியாவின் இறையாண்மைக்கு ஒரு பங்கம் வரும் என்றால், இலங்கையையும் எதிரி நாடே. அந்த நிலைமைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது என்று இந்திய இராணுவத்தின் முன்னாள் ஓய்வுநிலை அதிகாரி மேஜர் மதன்குமார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையில் இப்போது ஆட்சியிலிருக்கும் அரசை கட்டுக்குள் கொண்டுவர என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுத்த பின்னர், இந்தியா தனது நிலையை இலங்கைக்கு அறிவிக்கும்.
அந்த அறிவிப்பில் இலங்கை அரசுக்கு கடுமையான ஒரு செய்தி அனுப்பப்படும். இது என்னுடைய ஊகம். இலங்கையின் வான்பரப்பு, நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பு இவற்றில் ஏதாவதொன்றை எதிரி நாட்டுக்குக் கொடுத்து அதன் மூலமாக, இந்தியாவின் இறையாண்மைக்கு ஒரு பங்கம் வரும் என்றால், இலங்கையையும் எதிரியாகத் தான் பார்ப்போம் என்ற நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. இதற்கு முழுக்காரணம் இப்போது ஆட்சிசெய்து கொண்டிருக்கும் ராஜபக்சர்கள். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இழந்தமையால் தான், விடுதலைப்புலிகள் இலங்கை அரசிடம் தோல்வியைத் தழுவினர். இதனால் தான் சீனாவின் இராணுவப் பார்வை மற்றும் வர்த்தக பார்வை குறித்த இடங்களை நோக்கி இருக்கின்றது-என்றார். (ஒ.4)



# தமிழர்களுக்காக போராடத் தயார்

ஒன்றிணையுமாறு குணவங்ச தேரர் அழைப்பு

கொழும்பு,ஜூலை 8
வடக்கில் யாழ்ப்பாணம் உட்பட பல பிரதேசங்களிலுள்ள பெறுமதிமிக்க காணிகளை, வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்யும் முயற்சியில் தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது. இதற்கு எதிராக குரல் கொடுக்க நாம் தயாராகவுள்ளோம். தமிழ் மக்களும் எம்முடன் இணைந்து போராட வேண்டும்.
இவ்வாறு நாட்டைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் அழைப்பு விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இன ரீதியாக நாங்கள் பிரிந்திருந்தால் ஒருபோதும் எமக்கு சுதந்திரம் கிட்டாது. நாங்கள் பிரிந்திருந்தால், சர்வதேச சக்திகள் எமது நாட்டுக்குள் பிரவேசித்து, வளங்களைச் சூறையாடுவதற்கு சந்தர்ப்பமும் உருவாகும்.
மேற்குலக நாடுகளும், சக்திகளும் இலங்கையிலுள்ள எரிபொருள் வளங்களை கொள்ளையிடக் கங்கணம் காட்டித்திரிகின்றன.
இதனையிட்டுக் கவலையடைகிறேன். இப்போதாவது இந்த நாட்டை எமது கைகளுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளுக்கு நாட்டை ஒப்படைத்து, அழிவுகளே மீதமுள்ளன.
சுமார் 20 அரச நிறுவனங்களை அரசு விற்பனை செய்யவுள்ளது. யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் காணிகளை கொஞ்சம் கொஞ்சமாக வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்யப் போகின்றது.
அதனால் தமிழ் மக்களும் எம்முடன் போராட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும். முஸ்லிம் மக்களும் எம்முடன் இணையவேண்டும். அரசியல்வாதிகள் மற்றும் இனவாதிகளுக்கு அப்பால் சென்று மூன்றாவது தரப்பு சக்தியொன்றை உருவாக்கி, அதனூடாக விடுதலைப் போராட்டத்தை நாங்கள் ஆரம்பிக்க வேண்டும்- என்றார். (ஒ.4)



# நல்லாட்சி அரசை வீழ்த்தியது பஸிலே

அமைச்சர் ரோஹித புகழாரம்

கொழும்பு,ஜூலை 8
நல்லாட்சி அரசின் வீழ்ச்சிக்கு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவே பிரதான காரணம். எனவே இவரது நாடாளுமன்ற வருகை தற்போதைய அரசுக்கு பலமிக்கதாக அமையும் என்று துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர், நாட்டில் அரசியல் ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தினார். அவரது சிறந்த அரசியல் புலமை பொதுஜன பெரமுன அனைத்து தேசிய தேர்தல்களிலும் வெற்றி பெறுவதற்கு வழி வகுத்தது.
சிறந்த அரசியல் புலமையின் காரணமாகவே, நல்லாட்சி அரசு 5 வருடங்கள் பதவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்ய இடமளிக்கவில்லை. நல்லாட்சி அரசை வீழ்த்துவதற்கு முன்னின்று செயற்பட்டவர் பஸில். இவரது திட்டமிடல் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கு பிரதான காரணியாக அமைந்தது. பஸில் பலம் வாய்ந்த அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்பார். இவரது வருகை அரசியல் ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தும். இதனாலேயே எதிர்த்தரப்பினர் அதிக அச்சம் கொண்டுள்ளனர். அத்துடன் அமைச்சரவையிலும் ஒரு சில விடயதானங்களில் மாற்றம் ஏற்படும். அரசை பலமான முறையில் முன்னெடுத்துச் செல்வதே எமது பிரதான எதிர்பார்ப்பாகும்- என்றார். (ஒ.4)

# வெளிநாடுகளில் தங்கியுள்ள சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல்

தயாசிறியின் புதுக்கதை



கொழும்பு,ஜூலை 8
புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் பொய் பிரச்சாரங்கள் காரணமாக, அந்தந்த நாடுகளில் வாழும் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
அதனால் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று கூறும் பொய் பிரச்சாரங்களை நிறுத்த அரசு முறையான வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# ராஜபக்சக்களுக்குள் வெடித்தது மோதல்

கொழும்பு,ஜூலை 8
பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகி அமைச்சுப் பதவியை ஏற்கவுள்ள நிலையில், ராஜபக்சர்களுக்குள் மோதல் வெடித்துள்ளது என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
பஸில் நிதியமைச்சை கோரியுள்ளார். எனினும் பிரதமரும், அவரது குடும்பத்தினரும் நிதியமைச்சை பஸிலுக்கு வழங்குவதற்கு மறுத்துள்ளனர்.
இதன் காரணமாக அவருக்கு என்ன அமைச்சை வழங்குவது என்று முடிவாகவில்லை. இது தொடர்பான பேச்சுக்கள் தொடர்கின்றன.
அதேவேளை பஸிலுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுப் பதவியை வழங்குவது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது என்றும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ.4)

# அரசைக் கவிழ்க்க சுதந்திரக்கட்சி சதி

கொழும்பு,ஜூலை 8
நல்லாட்சி அரசில் அமைச்சர்களாக பதவி வகித்து, தற்போதைய அரசிலும் அமைச்சராக உள்ளவர்களே அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சிசெய்து வருகின்றனர் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.
இராஜாங்க அமைச்சராக உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தனக்கு அளித்த அமைச்சுப்பதவி, கேலிக்குரியதாகும் என்று விமர்சனம் வெளியிட்டிருந்தார். இதனால் ஆளுந்தரப்பிலிருந்து, தயாசிறிக்கு எதிராக கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.
இலங்கை அரசியல் களத்தில் சுதந்திரக் கட்சியில் தலைமைத்துவம் வகிக்கின்ற தலைவர்களே கட்சியின் வீழ்ச்சிக்கான பொறுப்பாளிகளாகும்.
ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தலில் எம்முடன் பயணித்தவர்களுக்கு நீதி வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் போட்டியிடல் மற்றும் பதவிகள் அளிக்கப்படுகையில் கூட்டணிக் கட்சிகளுக்கு நியாயமான தீர்மானங்களே வழங்கப்பட்டுள்ளன.
சுதந்திரக் கட்சிக்கு பொதுஜன முன்னணி நிலையான தீர்வளிக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை உணர்ந்து கொள்கின்ற அறிவு அவர்களுக்கு இல்லை என்று பெரமுன உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழேந்திரனின் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டவர்கள் கைது

மட்டக்களப்பு, ஜூலை 8

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக, கொலைக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம் நடத்த வந்த நபர்களை பொலிஸார் கைதுசெய்தனர். வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக, அவருடைய மெய்ப்பாதுகாவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். அவருக்கு நீதிகோரி அவரது தாய் தந்தையர் உட்பட பொதுமக்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட பஸ்ஸில் அவரது வீடு நோக்கி சென்றனர். அவர்களில் 16 பேரே நேற்றுப்பகல் கைதுசெய்யப்பட்டனர். இந்தநிலையில், பொலிஸ் நிலையத்துக்கு ஊடகவியலாளர் செல்வதற்கு பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், இதில் கைது செய்யப்பட்டவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-இ)

## ஏழாம் ஆண்டு நினைவுநாள்



அமரர் **சுந்தரம் குணராஜா**

திதி: அபரபக்க சதுர்த்தசி

ஆண்டு பல சென்றாலும்
- ஆறாது மனம்
நீண்டுசெல்லும் உங்கள்
- நினைவுகள்
எப்போதும் நிலைத் திருக்கும்
- எம்மோடு.

மலர்வு 01.01.1940 உதிர்வு 26.06.2014

குடும்பத்தினர்
தாளையடி லேன்,
திருநெல்வேலி.
077 620 3797

## வலயக் கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு
## விலைமனுக்கோரல் சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குதல்
## 01.08.2021 தொடக்கம் 31.07.2022 வரை

வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கிற்குரிய செயலமர்வு / விழாக்களுக்கான சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குவதற்கு தகுதியான / தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 01.08.2021 தொடக்கம் 31.07.2022 வரையான காலப்பகுதிக்கு வலயக்-கல்வி அலுவலக பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

01. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலயக் கல்வி அலுவலகம் வவுனியாவில் கிடைக்கும் கேள்விப்பத்திரம் (Application for Bid Documents) என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500 ஐ காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 08.07.2021 தொடக்கம் 21.07.2021 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

02. விலைக்கேள்விகள் 22.07.2021 திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக வல்யக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் (10.00 மணிக்கு) விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

03. தகுதி வாய்ந்த மற்றும் இதில் ஆர்வமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு அவர்களின் தொலைபேசி இலக்கம் 024 222 2026 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

04. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**திருமதி. அ. சுரேந்திரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**வவுனியா தெற்கு.**

## நோயாளர் நலன்புரிசங்கம்
## ஆதாரவைத்தியசாலை, தெல்லிப்பழை
## சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்குதலுக்கான விலைமனுக் கேள்விக்கான அழைப்பு - 2021/2022

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சிற்றுண்டிச்சாலைக்கு தகுதியான தகைமை வாய்ந்த நடத்துநர்களிடமிருந்து (15.08.2021) தொடக்கம் (14.08.2022) வரையான காலப்பகுதி க்கு எமது வைத்தியசாலையில் அமைந்துள்ள கீழ் குறிக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகள் நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளைக் கோருகின்றது.

| பெறுகை விபரம் | பெறுகை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்விப் பணம் (மாதாந்தம்) |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை- 01 குத்தகை (OPD நுழைவாயில் 1 இற்கு அருகில்) | BH/PWS/Canteen 1/2021 | எழுபதாயிரம் ரூபா (70,000/=) |
| சிற்றுண்டிச்சாலை- 02 குத்தகை ( புற்றுநோய் விடுதி கட்டட தொகுதி முன்பாக ) | BH/PWS/Canteen 2/2021 | ஐம்பதாயிரம் ரூபா (50,000/=) |


**ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப் பத்திரக் கட்டணம் 1000/=**

1. தகுதிவாய்ந்த அனுபவமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இது சம்பந்தப்பட்ட மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிசங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.
2. நாட்டமுள்ளவிலைக் கேள்விதாரர்கள் 'Application for Bid Documents' என்ற படிவத்தைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாகச் செலுத்திப் பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 08.07.2021 தொடக்கம் 21.07.2021 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை பெற்றுப் பூர்த்தி செய்து விலைக் கேள்விகள் 28.07.2021 நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக எமது வைத்தியசாலையின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விகள் பெறுகைப் பெட்டியில் கிடைக்கக் கூடியவாறு இடப்படல் வேண்டும். அன்றைய தினம் பி.ப 3 மணிக்கு கேள்விகள் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.
3. விலைக் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம்.
4. கிடைக்கப்பட்டவிலைக் கேள்விகளை ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ அல்லது முழுமையாக இரத்துச் செய்வதற்கோ கேள்விச் சபைக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

**லயன் சி. ஹரிகரன்**
**செயலாளர்**

**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.**

## மரண அறிவித்தல்



### சிவப்பிரகாசம் சிவராமன்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா மெல்போனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராமன் நேற்று (07.07.2021) புதன்கிழமை மெல்போனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், வள்ளியம்மைப்பிள்ளையின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், பிரஜாபதியின் மருமகனும், யமுனாவின் அன்புக் கணவரும், சிவமதுரன், சிவலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாணி, சாயிநிவேதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷாதேவி, சிவகுமாரன், சிவகணேசசுந்தரன், அமிர்தவேணி, கோமளாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் சிவமனோகரி, வாணி, விமலன், Dr. சிவகுருநாதன், சிவயோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரந்தரி - கலாரூபன், சிவானந்தி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஐஸ்வரியா, சங்கர், சுதந்தரி - சஷாந்தன், அவிநாஷ் ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், சைந்தவியின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மெல்போனில், நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கோவிட் 19 காரணமாக நேரடி தொடர்பைத் தவிர்க்கவும்.

தகவல்
சி. சிவகணேசசுந்தரன் சகோதரன்
(ஓய்வு பெற்ற அதிபர்)

பிரகாஷ்பதி, சுழிபுரம்.
077 347 5255

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 04 . 1933



இறப்பு 07 . 07 . 2021

### வல்லிபுரம் சபாபதி

**(இளைப்பாறிய இலங்கை மின்சார சபை ஊழியர்)**

தெல்லிப்பளையினை பிறப்பிடமாகவும் சுன்னாகம் மேற்கு அம்பனையை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சபாபதி (இளைப்பாறிய இலங்கை மின்சார சபை ஊழியர்) அவர்கள் நேற்று (07.07.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் நாகாத்தை ஆகியோரின் மகனும், நல்லையா நல்லம்மா ஆகியோரின் அருமை மருமகனும், சந்திரபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, நடராசா, லக்குமிப்பிள்ளை மற்றும் ஆறுமுகம், காலஞ்சென்ற சிவகுரு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவராசா, தவராசா மற்றும் தயாபரன் ஆகியோரின் மைத்துனரும், மோகனரூபன் (பிரான்ஸ்), மேகலாதேவி, காலஞ்சென்ற திருக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபந்தினி (பிரான்ஸ்) பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழ்விழி, மதிநிலா, தமிழிசை, சங்கவி (பிரான்ஸ்), பாலபிரசாந், மிதுர்சன் (பல்கலைக்கழகம்-கொழும்பு HNDE), சதுர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி:
077 081 9017, 074 155 6083

தகவல்:
குடும்பத்தினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சிமன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம்: 02. மத்தியவீதி 2ஆம் ஒழுங்கை . 27 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆறுமுகம் பெண் சரஸ்வதி என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம். குறித்த ஆதனத்தினை மீசாலை வேலுப்பிள்ளை ஆறுமுகம் கைம் பெண் நாகம்மா பிரசித்த நொத்தாரிசு வயிரமுத்து சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசு முகதாவில் 1946.11.06 ஆம் திகதியிடப்பட்ட 10035 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் கந்தையா பெண் சரஸ்வதிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர் இவ்வாதனம் 1946.11.06 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத் தாரிசு வயிரமுத்து சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசு முகதாவில் 10035 ஆம் இலக்கத்தில் தனது சகோதரி அடியற்றுக் காலஞ்சென்ற கந்தையா பெண் சரஸ்வதிக்கு முடிந்த சீதன உறுதிப்படி தனது சகோதரவழி யுரித்தும் ஆட்சியுமானது என மீசாலை மேற்கு சபாரத்தினம் கைம் பெண் சொர்ணம்மா பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை நடராசா முகதாவில் 2014.01.18 ஆம் திகதியிடப்பட்ட 5977 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் செகராசசேகரம் ஜெயசீலனுக்கும் பெண் கீதாவுக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று மீசாலை இறை "மலையாளன்காடு" நிலப்பரப்பு 6 குளி 10.41 - இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர் களால் 14.01.2003 ஆம் திகதியில் அளந்து வரைந்த 915/03 இலக்க அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு 6 குளி 10.41. இதற்கு எல்லை.

வடக்கு : விசுவலிங்கம் குமாரசாமிக்குரிய ஆதனம்
கிழக்கு : ஒழுங்கையும் வீதியும்
தெற்கு : முருகேசு நாகலிங்கத்திற்குரிய ஆதனம்
மேற்கு : கந்தசாமி பெண் வடிவாம்பாளுக்கும் சின்னத்தம்பி சரஸ்வதிக்குமுரிய ஆதனங்கள்

தற்போது செகராசசேகரம் ஜெயசீலனும் பெண் கீதாவும் இவ்வாத னத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளி லிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் மேற்குறித்த ஆதனத் திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவமங்கை இராமநாதன்**
**தவிசாளர்**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

## இங்கி. - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் இன்று

லண்டன், ஜூலை 8

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த இங்கிலாந்து அணி வீரர்கள் மூவருக்கும் அணியின் உதவியாளர்கள் 4 பேருக்கும் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து ஒட்டுமொத்த இங்கிலாந்து அணியும் தனிமைப்படுத்தப்பட்டு பென் ஸ்ரோக்ஸ் தலைமையில் இளம் வீரர்களைக் கொண்ட அணி களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையம் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 17.08.2021 தொடக்கம் 16.08.2022 வரை

யாழ் போதனாவைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 17.08.2021 தொடக்கம் 16.08.2022 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்களை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்
   1. பிரதான சிற்றுண்டிச்சாலை
   2. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City)
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 09.07.2021 தொடக்கம் 22.07.2021 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 20.07.2021 ம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீள்ளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50.000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச் சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும். குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும். மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் கடித உறையின் மேல பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 26.07.2021 திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்ப துடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
8. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021-2227764 தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
9. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராக ரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/ பிராந்திய பெறுகைக்குழு**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்,**

# மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




**யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலையில் இருபத்து இரண்டு வருடங்கள் ஆரம்பக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றி இன்று**

**மணிவிழாக்காணும்**

## செல்வி வசந்தா மகேந்திரன்

**(SLTS I)**

**அவர்களுக்கான மணி விழா வாழ்த்தும், சேவை நலன் பாராட்டும்**

**சேவை விரபம்**

**03.01.2000 - 07.07.2021 - யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலை**

முதலாரம்பமே வாழ்வுக்காதாரம்
மழலைகளின் கை பிடித்து
அகரத்தை அறிமுகமாக்கி - அவர்கள்
அகிலத்தில் புகழோடு வாழ
அத்தியாயம் அமைத்த ஆசிரியை
நீடூழி வாழ்க! வாழ்க!




எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகவும் பான்ட் குழுவின் பொறுப்பாசிரியராகவும், விளையாட்டுக் குழுவின் அங்கத்தவராகவும் அரும் பணியாற்றி இன்று (08.07.2021) மணி விழாக் காணும் நாயகியைச் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**பாடசாலை அபிவிருத்திக் குழு , பழைய மாணவர் சங்கம்**
**யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 03 . 1941



உதிர்வு 08 . 07 . 1993

### அமரர் சிதம்பரி மகேந்திரன்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

காலப் பெருவெளியில்
கரைந்தே மறைந்திடுதல்
வையகத்தில் மாந்தருக்கு
வரைந்த விதியெனினும்
சென்றவரை நினைப்பதும்
சிந்தை கலங்குவதும்
மண்ணி லிருப்பவரின்
வாழ்நாள் கடமையன்றோ
உங்களுடன் நாங்கள்
வாழ்ந்த காலங்கள்
என்றும் மனதை விட்டு
நீங்காத வசந்த காலங்கள்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாகம்மாள் வீதி,
உடுவில்

குடும்பத்தினர்

**DEWMAS JOB BANK**
வேலையாட்கள் தேவையா? 074 138 3368
யாழ் வேலை வாய்ப்புகளுக்கு dewmasweb.com
51, Amman Road, Nallur

## பதவி வெற்றிடங்கள்

**யாழில் பிரபல தனியார் நிறுவனத்திற்கு**
கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்கள் உள்ளன
யாழ்நகரை அண்டி வசிப்பிடத்தை உள்ளவர்கள்
மட்டும் விண்ணப்பிக்கவும்
காலை 6 Am - 2 Pm. 2 Pm - 9Pm.
வேலைசெய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

- விற்பனை பிரதிநிதி (2) பேர்
- தொழிநுட்பவியலாளர் (A/L Science) (2) பேர்
- வாகன ஓட்டுநரும் அலுவலக உதவிபுரியக் கூடியவர் (1நபர்)

தொடர்பு: 077 783 7991

## றோயல் மெடிக்கல் சென்ரர் (றோயல் பாமசி)

**10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு**

**விசேட விலைக்கழிவு (07.07.2021 - 21.07.2021)**

- குழந்தைகளுக்கான பால்மா வகைகள்
- கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மாருக்கான பால்மா வகைகள்
- முதியோர்களுக்கான போசாக்கு பால்மா வகைகள்
- நீரிழிவு / சலரோக நோயாளிகளுக்கான பால்மாவகைகள்
- ஏனையபொருள்கள் (மருந்துவகைகள், மாஸ்க், சனிட்ரைசர்) போன்றவற்றை பெற்றுக்கொள்ளமுடியும்.

No. 458 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்.போதனா வைத்தியசாலை OPD எதிரில்)
தொடர்பு: 077 746 6790, 021 221 3668

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

## சாவு.....

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 351 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் சாவடைந்த 38 பேரில் 21 ஆண்களும், 17 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி 30 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 5 ஆண்களும், 2 பெண்களும் சாவடைந்துள்ளனர். அத்துடன் 60 வயதுக்கு மேற்பட்ட 15 ஆண்களும், 14 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

### 1,229 தொற்று

நாட்டில் நேற்று ஆயிரத்து 229 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 68 ஆயிரத்து 662 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 38 ஆயிரத்து 131 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் இடைநிலைச் சிகிச்சை மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 180 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

**சிறுநீரகம் தேவை**
O. B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு : 076 239 9874

## நீங்காத நினைவலைகளில் 12 ஆண்டுகள்



மலர்வு 18.07.1930



உதிர்வு 22.06.2009

### அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO Jaffna Post Office)

திதி: சதுர்த்தசி - 08.07.2021 வியாழக்கிழமை

அப்பா உங்கள்
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக **08.07.2021 வியாழக்கிழமை** அன்று கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தெல்லிப்பளை மகளிர் இல்லம், சிவபூமி முதியோர் இல்லம், மருதனார்மடம் முதியோர் இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு உணவு உபசாரமும், கொரோனா பேரிடர் சுகாதார நடைமுறை விதிமுறைகளிற்கு அமைவாக நாவற்குழி திருவாசக மண்ட பத்திலும், **11.07.2021 ஞாயிற்றுக்கிழமை** அன்று கீரிமலை மடத்திலும் மதிய உணவுகள் வழங்கப்படும்.

மகன் : நாகராஜா விஜயகுமார்
(சங்கர்) சுவிஸ்

தகவல்:
குடும்பத்தினர் சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின்...

இவ்வாறு இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேரில் உறுதியளித்தார்.

பிரிட்டன் தூதுவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முக்கிய சந்திப்பு நடத்தினர். இதன்போதே தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெஸ்ட் மினிஸ்ட் ஹவுஸில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவும் கலந்துகொண்டனர்.

சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்டவுள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பிரதான நாடாகச் செயற்படும் பிரிட்டன், இலங்கைத் தமிழர் விடயத்தில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் எமது நன்றிகளைத் தெரிவித்தோம்.

வடக்கு, கிழக்கில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள், அதிகாரப் பகிர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர், பயங்கரவாதத் தடைச் சட்டம், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலின் அவசியம் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினோம்.

தற்போது தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதுகுறித்தும் கலந்துரையாடினோம். கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டாலும் பலர் இன்னமும் தடுப்புக்காவலில் உள்ளனர் என்று தெரிவித்தோம்.

இலங்கையில் நீண்டகால அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை எடுத்துரைத்தோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அரசு முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப் பிரிட்டன் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

தமிழர் விவகாரங்களில் இலங்கை அரசுக்குப் பிரிட்டனின் அழுத்தங்கள் தொடர்ந்து இருக்கும் என்று தூதுவர் சாரா ஹல்டன் எம்மிடம் உறுதியளித்தார்" - என்றனர். (த-22)

## அரசியல்...

இரா.சம்பந்தனின் கொழும்பிலுள்ள இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், த.கலையரசன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, கட்சியின் முக்கியஸ்தர் கே.வி.தவராசா உள்ளிட்ட அரசியல் குழுவினர் கூடி ஆராய்ந்தனர்.

இதன்போது தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதுமட்டுமன்றி, மாகாண சபைத் தேர்தலை மிகவிரைவில் நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தவிர, கட்சியின் உள்விவகாரங்கள் தொடர்பிலும் சுமுகமாகக் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-த)

## கறுப்பு...

கும் தலைவர்களும் அச்சுறுத்தப்பட்டுவருகின்றனர்" என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசின் ஒடுக்குமுறை செயற்பாடு தலைதூக்க ஆரம்பித்துள்ளது. எமது கட்சியின் விவசாய அமைப்பின் தலைவர் நாமல் கருணாரத்ன, பதுளை மாவட்ட அமைப்பாளர் சமந்த வித்யாரத்ன ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தநாட்டில் விவசாயிகள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். மீனவர்களுக்கும் பிரச்சினை உள்ளது. அதேபோல வர்த்தக மற்றும் புராதன ரீதியில் பெறுமதிமிக்க சொத்துகளை விற்பனை செய்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இவற்றுக்கு எதிராக மக்கள் கிளர்தெழ தயாராகும்போது போராட்டங்களுக்கு தடைவிதிக்கப்படுகின்றது-என்றார். (த-44)

## 5 மாதங்களான...

குறித்த குழந்தை, தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தநிலையில், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-13)

## தமிழரசின்...

தும் விலகியுள்ளார். இது தொடர்பான கடிதத்தை கட்சித் தலைவர், செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அவர், கட்சியின் இளைஞரணி இணைப்பாளர், மத்தியகுழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புக்களிலிருந்து விலகுகின்றேன் என்று கட்சியின் தலைவர், செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அவர் தவிர, கட்சியின் இளைஞர் அணி முக்கியஸ்தர்கள் சிலரும் கட்சிப் பொறுப்புக்களிலிருந்து விலகுகின்றனர் என்று அறிய முடிகிறது.

கட்சியின் யாழ். மாவட்ட இளைஞர் அணி பொருளாளர் த.சுதர்சன் தனது விலகல் கடிதத்தை கட்சித் தலைமைக்கு அனுப்பி வைத்துள்ளார். அடுத்த சில தினங்களில் இன்னும் சில இளைஞரணி பிரமுகர்கள் தமது விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கவுள்ளனர் என்று அறிய முடிகிறது. (த-5)

## யாழ்.நகரில்...

தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் 28 வயதுடைய வர்த்தகர் ஒருவர் வெட்டுக்காயத்துக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காசு கொடுக்கல் வாங்கல் காரணமாக இந்த மோதல் இடம்பெற்றது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-26)

## இலங்கை...

மல்போயிருந்த யாழ். ஊர்காவற்றுறையை சேர்ந்த மீனவர், தமிழகம் கோடியாக்கரையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சில்வஸ்டர் மரியதாஸ் என்ற மீனவரே சடலமாக மீட்கப்பட்டார்.

காணாமல்போன மீனவரை குறித்த கடற்பரப்பில், கடற்படையினருடன் இணைந்து மீனவர்கள் தேடியிருந்தனர். எனினும், கண்டறியமுடியவில்லை. இந்தநிலையில், அவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டது. அவர் அணிந்திருந்த கீழ் ஆடையில் இலங்கைக் கொடியின் இலச்சினை பொறிக்கப்பட்டிருந்ததை வைத்து அவர் இலங்கை மீனவர் என அடையாளம் காணப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

## மண்டைதீவில்...

அங்குள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு பின் பக்கமாகவுள்ள காணியில் விறகு பொறுக்குவதற்காகச் சென்ற கிராமத்தவர்கள், குறித்த கைக்குண்டை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அவற்றை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். (த-27)

## யாழ்.நகர...

எது. நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். நகரில் மருத்துவமனைக்கு முன்பாக, யாழ் போதனா மருத்துவமனைக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஒன்றரை ஏக்கர் காணியை, இராணுவத்திடம் கையளிக்கும்படி சுகாதார அமைச்சின் செயலாளர் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார். ஆனால், யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் அபிவிருத்திக்காக குறித்தகாணி பயன்படுத்தப்பட வேண்டும். குறித்த காணி இராணுவத்திடம் ஒப்படைக்கப்படுவதை எதிர்க்கிறோம் என்று அவர் தெரிவித்தார். (த-இ)

## ஹெய்ட்டி...

இடைக்கால பிரதமர் கிளாட் ஜோசப் தெரிவித்தார்.

பிரின்ஸில் உள்ள ஜனாதிபதியின் வீட்டில் அடையாளம் தெரியாத குழுவினரால் நேற்றுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலில், அவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் காட்டுமிராண்டித்தனமான முறையில் ஜனாதிபதி படுகொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் அந்த நாட்டின் முதல் பெண்மணி மார்ட்டின் மோஸும் காயமடைந்தார் என்று அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-இ)

## சந்தேகநபர்கள்...

சாட்டில் 6 பேர் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுவிஸிலிருந்து ஆவா குழுவைச் சேர்ந்த ஒருவர் பணம் அனுப்பி இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலியைச் சேர்ந்த மூவரும் புத்தூரைச் சேர்ந்த மூவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி கள்ளப்பாட்டுப்பகுதியில் வீடு ஒன்றுக்குள் நுழைந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன் இரண்டு வாகனங்கள் மீது தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றிருந்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தநிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நவாலியில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட ஒருவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் ஆறு பேரும் தாம் புரிந்த குற்றச்செயல்களை ஒப்புக்கொண்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தவிர, சந்தேகநபர்களிடமிருந்து மூன்று மோட்டார் சைக்கிள்கள், வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன. அவர்கள் 6 பேரும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டனர். (த-26)

## முல்லையிலிருந்து...

குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஒருவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அதனால், அவர் மூலமாக மேலும் பலருக்குத் தொற்று ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதியைச் சேர்ந்த புத்தளம், கறுக்குப்பனை, வென்னப்புவ, நீர்கொழும்பு பகுதிகளை சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கடற்றொழில் நடவடிக்கைக்காக முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் வாடிகள் அமைத்து வாழ்ந்துவருகின்றார்கள்.

அவர்களுக்கு கடந்த 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பி.சி.ஆர். பரிசோதனையின்போது 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து கடந்த 03 ஆம் திகதி தொடக்கம் குறித்த கரையோர பகுதி முடக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த 02 ஆம் திகதி 74 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது மேலும் 07 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அந்த ஏழுபேரில் ஒருவர் புத்தளத்துக்கு தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடக்கப்பட்ட பகுதியிலிருந்து அந்தநபர் எவ்வாறு மாகாணம்விட்டு மாகாணம் சென்றுள்ளார்? என்பது அயல்கிராம மக்கள் மத்தியில் விசனத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர் தப்பிச் செல்லுமளவுக்கு பாதுகாப்புத் தரப்பினரின் செயற்பாடு குறித்து மக்கள் சந்தேகமும் எழுப்புகின்றனர்.

ஒருசிலரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் சமூகத்தில் பலருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படு வாய்ப்புள்ளமையால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருதிக் காயத்துடன் களம்கண்ட மெஸ்ஸி

பிரேசிலியா, ஜூலை 8

**கோபா அமெரிக்காத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மெஸ்ஸி குருதிக் காயத்துடன் விளையாடியமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

இந்த ஆட்டத்தில் காயமடைந்தார் மெஸ்ஸி. காயத்தில் இருந்து குருதி வெளியேறிய போதிலும் அவர் மைதானத்தை விட்டு வெளியேறாமல் தொடர்ந்தும் களத்திலேயே நின்றார். இது தொடர்பான ஒளிப்படங்களும் காணொலிகளும் வெளியாகியுள்ளன. மெஸ்ஸியின் ரசிகர்களிடத்தில் அவை நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காக விளையாடிவரும் மெஸ்ஸி தனது கழகத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை நாட்டுக்குக் கொடுப்பதில்லை என்றதொரு குற்றச்சாட்டு நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கோபா அமெரிக்கா தொடர்

# ஆர்ஜென்ரீனா அணி இறுதிக்குள் நுழைவு

**பிரேசிலியா, ஜூலை 8**


**கோபா அமெரிக்காத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஆர்ஜென்ரீனா அணி.**



தென்னமரிக்க நாடுகளுக்கு இடையிலான கோபா அமெரிக்காத் தொடர் இடம்பெற்று வருகின்றது. நேற்று இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இடம்பெற்றது. இதில் ஆர்ஜென்ரீனா அணியை எதிர்த்து கொலம்பியா மோதியது.

ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்திலேயே ஆர்ஜென்ரீனா வீரர் லுவாரோ மார்டினஸ் அந்த அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது ஆர்ஜென்ரீனா.

இரண்டாவது பாதியின் 60ஆவது நிமிடத்தில் கொலம்பியாவின் நட்சத்திர வீரர் லூயிஸ் டியாஸ் பதிலடி கொடுக்க கோல் கணக்கு 1:1 என்றானது. இதன் பின்னர் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஆர்ஜென்ரீனா அணி. (ம)



## நீயும் நானுமா கண்ணா நீயும் நானுமா?

பிரேசிலியா, ஜூலை 8

கோபா அமெரிக்காத் தொடரில் ஜூலை 11ஆம் திகதி இடம்பெறும் இறுதியாட்டத்தில் தென்னமரிக்கக் கண்டத்தில் இரு பலம் பொருந்திய அணிகளான பிரேசிலும் ஆர்ஜென்ரீனாவும் மோதவுள்ளன.

இந்தத் தொடரில் பிரேசில் அணி பெருவையும், ஆர்ஜென்ரீனா அணி கொலம்பியாவையும் வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்துள்ளன. பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான நெய்மரும், ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸியும் நீண்ட நாள்களாக ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காக விளையாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் ஜூலை 10ஆம் திகதி இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் பெருவை எதிர்த்து கொலம்பியா மோதவுள்ளது. (ம)

## யூரோ கிண்ண தொடரில் இறுதிக்கு இத்தாலி தகுதி

உரோம், ஜூலை 8

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று அதிகாலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பலம் பொருந்திய ஸ்பெய்னை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது இத்தாலி.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரு அணிகளும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 60ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் செல்சா அந்த அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த 20 நிமிடங்களுக்கு இத்தாலியின் ஆதிக்கம் ஆட்டத்தில் இருந்தது. 80ஆவது நிமிடத்தில் ஸ்பெய்னின் கோலைப் பதிவுசெய்தார் அல்வாரோ மொரட்டா. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. மேலதிக நிமிடங்களில் மாற்றங்கள் நிகழ வில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இத்தாலி. (ம)



போட்டிப் பரீட்சைகளுக்கான
ZOOM
செயலி ஊடான வகுப்புக்கள் நடைபெறுகின்றன
தவசேகர் வளவாளர் குழு
*SLEAS
*GS,MSO
*Health M.A, Teaching
*All island service
*LLB, Agr-M.A, R.D.O
விபரங்களுக்கு
Whatsapp/Viber
076 688 3394
077 077 4569

வீடு வாடகைக்கு
கச்சேரி நல்லூர் வீதியில், சகல வசதிகளுடனும் புதிதாக கட்டப்பட்ட 2 மாடி வீட்டில், மேல் மாடி மட்டும் வாடகைக்கு விடப்படும்.
077 794 7192

IELTS New Batch
தனிப்பட்டதும், குழு வகுப்புகள் ஆரம்பம்
077 798 9830 Brown Rd, Jaffna

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி, 1ஆம் ஒழுங்கையில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.
(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)
தொடர்பு : 076 221 2037, 076 734 1023, 077 064 2661



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.